بسم الله الرحمن الرحیم نحمدہ ونصلی علیٰ رسولہ الکریم وعلیٰ عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 6

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 3

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

07 ஜமாதிஸ் ஸானீ 1442 ஹிஜ்ரி கமரி 21 ஸுலஹ் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக்
21 ஜனவரி 2021

**அல்லாஹ்வின் கட்டளை**

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اٰمِنُوْا بِاللّٰهِ وَرَسُوْلِهٖ وَالْكِتٰبِ الَّذِىْ نَزَّلَ عَلٰى رَسُوْلِهٖ وَالْكِتٰبِ الَّذِىْۤ اَنْزَلَ مِنْ قَبْلُ ؕ

நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்விடத்தும், அவனுடைய தூதரிடத்தும், அவன் தனது தூதருக்கு இறக்கிய வேதத்திடத்தும், இதற்கு முன்னர் அவன் இறக்கிய வேதத்திடத்தும் நம்பிக்கை கொள்ளுங்கள். (4:137)

**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## இந்த (புதிய) ஆண்டு ஜமாஅத்திற்கும் உலகத்திற்கும், மனித குலத்திற்கும் அருளுக்குரியதாக அமைய துஆ செய்யுங்கள். நாமும் நமது கடமைகளை ஆற்றியவாறு முன்பை விட அதிகமாக இறைவனின் முன்னால் குனியக்கூடியவர்களாக திகழ வேண்டும். மேலும் நமது இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்தக்கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும்

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய...) அவர்கள் 01 ஜனவரி 2021 அன்று ஆற்றிய குத்பா பேருரையில் இவ்வாறு கூறினார்கள்:**

இன்று புதிய ஆண்டின் முதலாவது நாளாகும். மேலும் ஜுமுஆ நாளாகும். இந்த ஆண்டு ஜமாஅத்திற்கும், உலகத்திற்கும், மனித குலத்திற்கும் அருளுக்குரியதாக அமைய துஆ செய்யுங்கள். நாம் நமது கடமைகளை ஆற்றியவாறு முன்பை விட அதிகமாக இறைவனின் முன்னால் குனியக்கூடியவர்களாக ஆக வேண்டும். மேலும் நமது இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்தக்கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும். உலக மக்களும் தனது படைப்பின் நோக்கத்தை புரிந்தவாறு அல்லாஹ்விற்குரிய உரிமையை வழங்கக்கூடியவர்களாக ஆகிவிட வேண்டும். ஒருவர் மற்றவரின் உரிமைகளை பறிப்பதற்கு பகரமாக அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நடந்து ஒருவர் மற்றவரின் மற்றவரின் உரிமைகளை வழங்குபவர்களாக ஆக வேண்டும். அவ்வாறில்லையென்றால் இறைவன் மீண்டும் தனது வழிமுறைக்கேற்ப உலகவாதிகளுக்கு அவர்களின் கடமைகளின் பக்கம் கவனமூட்டுகின்றான். அந்தோ! நாமும் உலகத்தின் அனைத்து மக்களும் இந்த முக்கிய கருத்தை புரிந்து கொள்ள வேண்டுமே! மேலும் மறுமையை சீராக்கிக் கொள்ள வேண்டுமே!

இவை அனைத்தையும் செய்வதற்கு நாம் நமது நிலைமைகளை ஆய்வு செய்ய நேரிடும் என்பது வெளிப்படையாகும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் காலத்தின் இமாமை ஒப்புக் கொண்ட நாம் நமது நிலைகளை இவ்வாறு மாற்றி விட்டோமா? அதாவது நாம் அல்லாஹ்வின் உரிமைகளை வழங்குவதுடன் அல்லாஹ்விற்காக மட்டும் அவனது அடியார்களுக்குரிய உரிமைகளை வழங்கக் கூடியவர்களாக இருக்கின்றோமா? அல்லது இன்னும் நாம் நம்மை சீர்திருத்தி ஒருவர் மற்றவர் மீதான அன்பு, நேசத்தின் உணர்வுகளை அசாதாரண தரத்திற்கு எட்டச் செய்வதற்கு அவசியம் இருக்கின்றதா? என்று ஆய்வு செய்ய வேண்டும்.

எனவே ஒவ்வொர் அஹ்மதியும் மிகவும் ஆராய வேண்டும். அவரிடம் ஒரு பெரும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனை செய்வதற்கு முதலில் தம்மிடத்தில் அன்பு, நேசம், சகோதரத்துவத்தின் சூழலை உருவாக்க வேண்டும். தனது சமூகத்திலும், அஹ்மதி சூழலிலும் இந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். பின்னர் உலகை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின்கீழ் கொண்டு வர வேண்டும். அந்த கொடி அல்லாஹ்வின் ஏகத்துவ கொடி ஆகும். அப்போதுதான் நாம் நமது பைஅத்தின் நோக்கத்தில் வெற்றி பெற முடியும். மேலும் அந்நிலையில்தான் நாம் பைஅத்திற்குரிய உரிமைகளை வழங்கக்கூடியவர்களாக இருக்க முடியும். மேலும் அந்நிலையில்தான் நாம் அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசாக முடியும். மேலும் அந்நிலையில்தான் நாம் புத்தாண்டு வாழ்த்துக்களை கூறுவதற்கும், பெறுவதற்கும் தகுதி படைத்தவராக இருக்க முடியும். அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. ஒவ்வொரு அஹ்மதி ஆணும், பெண்ணும், இளைஞனும், சிறுவனும், முதியவரும் இந்த விஷயத்தை புரிந்தவாறு இவ்வாறு உடன்படிக்கை செய்ய வேண்டும். அதாவது இந்த புதிய ஆண்டில் உலகில் ஒரு புரட்சியை ஏற்படுத்துவதற்காக நாங்கள் எங்களது அனைத்து ஆற்றல்களையும் பயன்படுத்துவோம் என்று உறுதிமொழி எடுக்க வேண்டும். ஒவ்வொரு அஹ்மதிக்கும் அல்லாஹ் அதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

புத்தாண்டு துவக்கத்தின் மகிழ்ச்சியாக இருக்கட்டும் அல்லது பெருநாள் மகிழ்ச்சியாக இருக்கட்டும். அசல் மகிழ்ச்சி என்பது நாம் உலகின் எல்லா பக்கமும் இறைவனின் ஏகத்துவத்தின் கொடியை பறக்க விடும்போதுான் ஏற்படும். அந்த ஏகத்துவ கொடியுடனேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றினார்கள். உலகம் மனித இனத்தின் மாண்புகளை அடையாளங்கண்டு கொள்ளும்போதுதான் நமக்கு உண்மையான மகிழ்ச்சி ஏற்படும். தங்களுக்கிடையிலான வெறுப்புகள் அன்பால் மாறி விட வேண்டும். அல்லாஹ் அந்த மகிழ்ச்சிக்கான ஏற்பாட்டையும் நமக்கு விரைவில் செய்வானாக. இறைவன் புறமிருந்து தோன்றிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியை ஏற்றுக் கொள்ளக்கூடிய அறிவை அல்லாஹ் முஸ்லிம் சமுதாயத்திற்கு வழங்குவானாக. உலகிற்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக. உலக மக்களும் அல்லாஹ் மற்றும் அவனது அடியார்களின் உரிமையை செலுத்துவதன் பக்கம் கவனம் செலுத்துபவர்களாக ஆக வேண்டும். அல்லாஹ் ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு அஹ்மதியையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக. இந்த ஆண்டு ஒவ்வொரு அஹ்மதிக்கும், ஒவ்வொரு மனிதனுக்கும் பரக்கத்திற்குரிய ஏற்பாட்டை செய்யட்டுமாக. கடந்த ஆண்டு நம்மிடம் ஏற்பட்ட குறைகளையும், இறைவனின் கோபத்திற்கு ஆளாக்கிய பலவீனங்களையும், மேலும் சில அருட்கொடைகளிலிருந்து நம்மை விலக்கி வைப்பதற்கு காரணியாக இருந்தவற்றையும் அல்லாஹ் நம்மிடமிருந்து அகற்றுவானாக. மேலும் தனது அருட்களுக்கும், பரிசுகளுக்கும் வாரிசாக்குவானாக. நாம் உண்மையான நம்பிக்கைளார்களாக ஆகிவிட வேண்டும். இந்த துஆக்களை செய்வதற்கும் அல்லாஹ் நமக்கு நற்பாக்கியம் வழங்குவானாக.

**எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு**

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு முதல் நாளிலோ அல்லது இரண்டாவது நாளிலோ ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விட்டார்கள். இதுவே உண்மையாகும். ஏனென்றால் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை விட்டு ஒருபோதும் விலகவுமில்லை; ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குப் பின்னால் நின்று தொழுவதை தவிர்க்கவுமில்லை.**

**ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடைய ஏனைய அனைத்து சிறப்புகளை புறக்கணித்து விட்டாலும் கூட அபாயகரமான காலகட்டத்தில் அன்னார் கிலாஃபத் பொறுப்பை ஒப்புக் கொண்டது மிகவும் வீரமிக்க காரியமாகும். மேலும் பாராட்டுதலுக்குரியதாகும். அன்னார் தனது கண்ணியம் மற்றும் தனது இருப்பை இஸ்லாத்திற்கெதிரில் எந்த வகையிலும் பொருட்படுத்தவில்லை. மேலும் இவ்வளவு பெரிய சுமையை சுமந்து கொண்டார்கள் (ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது – ரலி)**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபாவும், அன்னாரின் மருமகனுமாகிய ஹஸ்ரத் அலி முர்தஸா (ரலி) அவர்களின் போற்றுதலுக்குரிய நற்குறிப்புகள்**

**நான் பாகிஸ்தானிய அஹ்மதிகளிடம் குறிப்பாக இந்த விஷயத்தை கூறுவேன். துஆக்களின் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய அளவிற்கு இன்னும் கவனம் ஏற்டவில்லை. எனவே முன்பை விட அதிகமாக துஆக்களின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் நம்மை விரைவாக கஷ்டங்களிலிருந்து வெளியேற்றுவானாக. மேலும் எளிமையை ஏற்படுத்துவானாக. மேலும் நாம் உண்மையான இஸ்லாத்தின் தூதுச் செய்தியை சுதந்திரத்துடன் பாகிஸ்தானிலும், உலகின் ஒவ்வொரு மூலையிலும் சென்று சேர்ப்பவர்களாக திகழ்வோமாக.**

**அல்ஜீரியா மற்றும் பாகிஸ்தானிய அஹ்மதிகளுக்கு ஏற்பட்டிருக்கும் கடுமையான எதிர்ப்பை கருத்தில் கொண்டு சிறப்பான துஆக்களின் பக்கம் மீண்டும் மீண்டும் கவனமூட்டப்பட்டது**

**ரப்வாவைச் சேர்ந்த டாக்டர் தாஹிர் அஹ்மது சாஹிப், மதிப்பிற்குரிய ஹபீபுல்லாஹ் சாஹிப் மஸ்ஹர், மதிப்பிற்குரிய கலீஃபா பஷீருத்தீன் அஹ்மது சாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய அமீனா அஹ்மத் சாஹிப் ஆகிய நான்கு மர்ஹூம்களின் நற்குறிப்பை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். மேலும் அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைத்தார்கள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 04 டிசம்பர் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **04 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு நடைபெற்று வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதி காலத்தில் நோயுற்றபோது அன்னார் (ஸல்) அவர்களுக்கு ஆற்றப்பட்ட தொண்டுகளின் குறிப்பு கிடைக்கின்றது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் அப்தில்லாஹ் அவர்கள் அறிவிக்கின்றார்கள். இந்த அறிவிப்பு புகாரியில் வந்துள்ளது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நோய்வாய்ப்பட்டார்கள். மேலும் அன்னாரின் நோய் அதிகமானது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது மனைவிமார்களிடம் எனது வீட்டில் வைத்து பணிவிடை செய்வதற்கு அனுமதி வேண்டினார்கள். அன்னாரின் துணைவியார்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அனுமதி வழங்கினார்கள்.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரண்டு நபர்களுக்கு மத்தியில் புறப்பட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதங்கள் நிலத்தில் கோடுகளை கிழித்துக் கொண்டே சென்றன. ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) மற்றும் வேறொரு நபருக்கு மத்தியில் அன்னார் புறப்பட்டார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் வீட்டிலேயே தங்கியிருந்தார்கள். அங்கிருந்தே இரு நபர்களின் உதவியுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலுக்கு வருகை தந்தார்கள்.

உபைதுல்லாஹ் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறிய இந்த விஷயத்தை ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்களிடம் நான் கூறினேன். அப்போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் குறிப்பிட்ட அந்த நபர் யார் என்று உங்களுக்கு தெரியுமா? என்று என்னிடம் கேட்டார்கள். இல்லை என்று நான் கூறினேன். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் குறிப்பிட்ட இரண்டு நபர்களில் ஒருவர் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) ஆவார்கள். அன்னார் பெயர் குறிப்பிடாத இரண்டாவது நபர், ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் (ரலி) ஆவார்கள் என்று அன்னார் கூறினார்கள். (சஹீஹ் புகாரி, கிதாபுல் அஸான்.... ஹதீஸ் எண் 665)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து வெளியேறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்திருந்தார்கள். அப்போது அபுல் ஹஸனே! இன்று காலை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உடல் நிலை எப்படி உள்ளது? என்று மக்கள் வினவினர். அதற்கு அல்ஹம்துலில்லாஹ். இன்று காலை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உடல் நிலை நன்றாக உள்ளது என்று கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் அப்பாஸ் பின் அப்தில் முத்தலிப் அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் கரங்களைப் பிடித்து அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் மூன்று நாட்களுக்குப் பிறகு வேறொரு நபருக்கு கீழ் சென்று விடுவீர்கள் என்று கூறினார்கள். ஏனென்றால் இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது இந்த நோயில் விரைவில் மரணமடைந்து விடுவார்கள் என்று நான் கருதுகிறேன். ஏனெனில் மரணத் தருவாயில் பனூ அப்துல் முத்தலிப் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களின் முகங்களை நான் நன்றாக கண்டறியக்கூடியவனாக உள்ளேன். வாருங்கள். நாம் ஹஸ்ரத் நபிகள்

நாயகம் (ஸல்) அவர்களிடம் செல்வோம். மேலும் இந்த விவகாரம் (அதாவது கிலாஃபத்) யாருக்கு கிடைக்கும் என்று அன்னாரிடம் கேட்போம். ஒருவேளை நம்மவர்களில் கிடைத்தால் அது பற்றி நாம் அறிந்து கொள்ளலாம். நாம் அல்லாத வேறொருவருக்கு கிடைக்குமென்றால் அது பற்றியும் நாம் தெரிந்து கொள்ளலாம். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அது பற்றி நமக்கு ஏதாவது வஸிய்யத் செய்யக்கூடும் என்று அன்னார் கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் இந்த விஷயத்தைக் கேட்டு அன்னார் இதனை (கண்ணியத்தை) நமக்கு வழங்காவிட்டால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு மக்கள் ஒருபோதும் நமக்கு தர மாட்டார்கள் என்று கூறினார்கள். இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் இது தொடர்பாக நான் கேட்க மாட்டேன் என்று கூறினார்கள். (சஹீஹ் புகாரி, கிதாபுல் மகாஸி..... ஹதீஸ் எண் 4447)

இதுவும் புகாரியின் அறிவிப்பாகும். புகாரியில் இந்த இடத்தில் அரபிச் சொற்கள் இவ்வாறு வந்துள்ளன.

أَنْتَ وَاللهِ بَعْدَ ثَلَاثٍ عَبْدُ الْعَصَا

இது தொடர்பாக ஹஸ்ரத் சய்யிது வலியுல்லாஹ் ஷா சாஹிப் அவர்கள் தனது புத்தகத்தில் இந்த குறிப்பை பதிவிட்டுள்ளார்கள். இதன் பொருள் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று நாட்களுக்குப் பிறகு மரணமடைந்து விடுவார்கள் என்பதாகும்.

(சஹீஹ் புகாரி தொகுதி 9 பக்கம் 337 ரப்வாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆமிர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: (ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களை ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் ஃபஸல் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் (ரலி) ஆகியோர் நீராட்டினர். அதே நபர்கள்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கப்ரிலும் இறக்கினார்கள். அவர்கள் தங்களுடன் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களையும் சேர்த்துக் கொண்டார்கள் என்று மற்றோர் அறிவிப்பில் வந்துள்ளது.

(சுனன் அபீ தாவூது, கிதாபுல் ஜனாயிஸ்.... ஹதீஸ் எண் 3209)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தது தொடர்பாக பல்வேறு அறிவிப்புகள் வருகின்றன. ஏனெனில் சில அறிவிப்புகள் இவ்வாறு வருகின்றன. அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் முழுமையான விருப்பத்துடனும், ஆர்வத்துடனும் உடனடியாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விட்டார்கள். இதற்கு எதிராக வேறு சிலர் எழுதியுள்ளார்கள். எவ்வாறிருப்பினும் அபூ சயீத் குத்ரி அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள். முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விட்ட பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மேடையில் ஏறி நின்றார்கள். மேலும் அன்னார் மக்களை பார்த்தார்கள். அப்போது அன்னாரால் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை காண இயலவில்லை. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை பற்றி வினவினார்கள். அன்ஸாரில் சிலர் சென்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை அழைத்து வந்தனர்.

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை நோக்கி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையின் மகனே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மருமகனே! நீங்கள் முஸ்லிம்களின் வலிமையை குறைக்க விரும்புகின்றீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலீஃபாவே! என்னை பிடிக்காதீர்கள் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள். பின்னர் அன்னார் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விட்டார்கள்.

(அஸ்ஸீரத்துந்நபவிய்யா லி இப்னி கஸீர் பக்கம் 693 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தாரீகே திப்ரி எனும் புத்தகத்தில் இவ்வாறு உள்ளது. ஹபீப் பின் அபீ சாபித் அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தனது வீட்டில் இருந்தார்கள். அப்போது அன்னாரிடம் ஒருவர் வந்தார். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பைஅத் பெறுவதற்காக வருகை தந்துள்ளார்கள் என்று அன்னாரிடம் கூறினார். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் சட்டை அணிந்து அமர்ந்திருந்தார்கள். உடனடியாக அதே நிலையில் புறப்பட்டு விட்டார்கள். மேலும் எந்த வகையிலும் கால தாமதம் ஆகுவதை அன்னார் விரும்பவில்லை. எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அருகில் அமர்ந்து கொண்டார்கள். பின்னர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தமக்கான ஆடையை கொண்டு வரும்படி கூறினார்கள். பின்னர் அந்த ஆடையை அணிந்து கொண்டார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சபையிலேயே அமர்ந்து கொண்டார்கள்.

(தாரீகே திப்ரி தொகுதி 3 பக்கம் 257 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணித்த பிறகு முதல் நாள் அல்லது இரண்டாவது நாளன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விட்டார்கள் என்று அல்லாமா இப்னு கஸீர் அவர்கள் கூறுகின்றார்கள். இதுவே உண்மையாகும். ஏனென்றால் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை விட்டு ஒருபோதும் விலகவுமில்லை; ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குப் பின்னால் நின்று தொழுவதை தவிர்க்கவுமில்லை.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி கஸீர் பக்கம் 694 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்ய துவக்கத்தில் சற்று தாமதித்தார்கள். அதன் பிறகு வீட்டிற்கு சென்றதும் அன்னாருக்கு என்ன தோன்றியது என்று இறைவனே நன்கறிவான். அன்னார் தலைப்பாகை கூட அணியவில்லை. உடனடியாக தொப்பி அணிந்தவாறே பைஅத் செய்வதற்காக வந்து விட்டார்கள். தலைப்பாகையை பிறகுதான் பெற்றுக் கொண்டார்கள். அன்னாரின் உள்ளத்தில் இது ஒரு பெரும் துன்பமாகும் என்ற எண்ணம் தோன்றியிருக்கலாம். அதன் காரணமாகவே தலைப்பாகை கூட அணியாமல் அன்னார் விரைந்து செயல்பட்டார்கள் என்று தெரிய வருகின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 183 – 1984 ஆண்டு அச்சிடப்பட்டது)

அதாவது ஆடை கூட முழுமையாக அணியாமல் அவசர அவசரமாக சென்று விட்டார்கள். சில வகையான அறிவிப்புகளில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்திருந்தார்கள் என்று வந்துள்ளது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் மரணம் வரை பைஅத் செய்யவில்லை என்று புகாரியில் வந்துள்ளது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி.... ஹதீஸ் எண் 4240)

ஆனால் ஏராளமான ஆலிம்கள் புகாரியில் இடம் பெற்றுள்ள இந்த அறிவிப்பு தொடர்பாக மாற்று கருத்து கூறியுள்ளனர். அந்த வகையில் இமாம் பைஹக்கி சுனன் அல் குப்ராவில் இமாம் ஷஹாபுத்தீன் ஸுஹ்ரி அறிவிப்பை குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அதில் அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் மரணம் வரை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்யவில்லை.

தொடர்ந்து எழுதுகின்றார்கள்: (அதன் மொழியாக்கம் இவ்வாறாகும்.) ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் மரணம் வரை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்வதிலிருந்து விலகி இருந்தார்கள் என்ற இந்த கூற்று சரியானதல்ல.

ஹஸ்ரத் அபூ சயீத் குத்ரி (ரலி) அவர்களின் அறிவிப்பு மிகவும் சரியானதாகும். அதில் அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு நடைபெற்ற பொதுவான பைஅத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கரங்களில் பைஅத் செய்து விட்டார்கள்.

(அஸ்ஸுனனுல் குப்ரா.... ஹதீஸ் எண் 12732)

வேறு சில ஆலிம்கள் புகாரியில் இடம் பெற்றுள்ள இந்த அறிவிப்பை இவ்வாறு விளக்கமளித்து பொருத்துகின்றார்கள். அதாவது இந்த இரண்டாவது பைஅத்திற்கு அவர்கள் ‘பைஅத்தை புதுப்பித்தல்’ என்று பெயர் கொடுத்துள்ளனர். அதாவது புகாரி போன்ற ஹதீஸ் புத்தகத்தில் இந்த அறிவிப்பிற்கு முக்கியத்தும் கொடுக்கப்பட்டுள்ளதால் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் இந்த இரண்டாவது பைஅத்திற்கு ஏதாவது பெயர் கொடுப்பது அவசியமாகும் என்று அந்த மார்க்க அறிஞர்கள் கருதியிருக்கக்கூடும். எவ்வாறிருப்பினும் புகாரியின் அனைத்து அறிவிப்புகளும் சரியாகவே இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை.

டாக்டர் அலி முஹம்மது ஸலாபி சீரத் அமீருல் மூமினீன் அலி பின் அபி தாலிப் என்ற தனது புத்தகத்தில் இவ்வாறு எழுதுகின்றார்கள்: அதாவது அல்லாமா இப்னு கஸீர் மற்றும் ஏராளமான அறிஞர்களின் பார்வையில் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் மரணமடைந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தனது பைஅத்தை புதுப்பித்துக் கொண்டார்கள்.

(சீரத்துல் அமீருல் மூமினீன் அலி பின் அபீ தாலிப் பக்கம் 121 – 2006 பைரூத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஏற்கனவே பைஅத் செய்திருந்தார்கள். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு மீண்டும் புதுப்பித்துக் கொண்டார்கள் என்று அறிஞர்கள் (அந்த பைஅத்திற்கு) ‘பைஅத்தை புதுப்பித்தல்’ என்று பெயரிட்டுள்ளனர்.

அல்லாமா இப்னு கஸீர் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் மரணமடைந்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் தனது பைஅத்தை புதுப்பித்துக் கொள்வது உகந்ததாகும் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கருதினார்கள்.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி கஸீர் பக்கம் 694 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ‘சிர்ருல் குலஃபா’ என்ற தனது அரபி புத்தகத்தில் ஹஸ்ரத் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீது பழிசுமத்தி ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களே கலீஃபா ஆகியிருக்க வேண்டும் என்று கருதுபவர்களின் கூற்றுகளுக்கு விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உலகம் மற்றும் அதன் ஆடம்பரங்களுக்கு முன்னுரிமை வழங்கக்கூடிய நபர்களைச் சார்ந்தததவர்களாகவும் பலவந்தமாக உரிமையை பறிப்பவராகவும் சித்தீகே அக்பர் (ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி)) அவர்கள் இருந்தார்கள் என்ற கூற்றை ஒரு வாதத்திற்கு ஏற்றுக் கொண்டால் அந்நிலையில் நாம் இந்தக் கூற்றை ஏற்றுக் கொள்ளும் நிர்பந்தத்திற்கு ஆளாகி விடுவோம்.

அதாவது இறைவனின் சிங்கமான ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் நயவஞ்சகர்களை சார்ந்தவர்களாக இருந்தார்கள் என்றும் (நவூதுபில்லாஹ்) மேலும் நாம் எண்ணுவதைப் போன்று உலகத்தை விட்டு விட்டு அல்லாஹ்வின் மீது அன்பு கொள்ளக்கூடியவராக அன்னார் இருக்கவில்லை என்றும் ஒப்புக் கொள்ளும் நிர்பந்தம் ஏற்படும். இன்னும் கூறப்போனால், உலகம் மற்றும் அதன் ஆடம்பரங்களில் அன்னார் மிகவும் விரும்பம் கொண்டவராக இருந்தார்கள் என்று பொருளாகி விடும். இதன் காரணமாகவே அன்னார் காஃபிர்கள் மற்றும் முர்தத்களை விட்டு விலகவில்லை என்றும் (அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பற்றி காஃபிர் என்று மிகவும் கடுமையான சொற்களை ஆட்சேபனை செய்பவர்கள் பயன்படுத்துகின்றனர்), இன்னும் கூறப்போனால் நயவஞ்சகர்களுடன் இணைந்திருந்தார்கள். சுமார் 30 வருடங்கள் வரை உண்மையை மறைத்து வந்தார்கள் என்றும் பொருளாகி விடும்.

அடுத்து ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் பார்வையில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் காஃபிராகவும், உரிமைகளை பறிப்பவராகவும் இருந்தார்கள் என்றால் பின்னர் அன்னாரிடம் ஏன் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் பைஅத் செய்ய சம்மதித்தார்கள்? அன்னார் அநீதி, குழப்பம் நிறைந்த பூமியிலிருந்து விலகி ஏன் வேறொரு நாட்டை நோக்கி ஹிஜ்ரத் செய்யவில்லை? அல்லாஹ்வின் பூமி அன்னார் ஹிஜ்ரத் செய்ய முடியாத அளவிற்கு சுருங்கியதாக இருந்ததா? அவ்வாறான நிலையில் ஹிஜ்ரத் செய்து செல்வதுதான் இறையச்சமுடையவருடைய அடையாளமாகும். விசுவாசமிக்க இப்ராஹீம் (அலை) அவர்களை பாருங்கள். அன்னார் உண்மைக்கு சாட்சியம் வழங்க எந்த அளவிற்கு வலிமை பெற்றவராக இருந்தார்கள். (மிகவும் தைரியசாலியாக இருந்தார்கள்.) தனது தந்தை வழிகெட்டு விட்டார்.மேலும் நேர்வழியிலிருந்து தன்னை தடுக்கின்றார் என்பதை அன்னார் கண்டார்கள்.

மேலும் தனது சமுதாயம் சிலைகளை வணங்குகின்றது என்பதையும் அவர்களில் சான்றோர்கள் மற்றும் பெரியவர்கள் ஏக இறைவனை வணங்குவதை கைவிட்டு விட்டார்கள் என்பதையும் கண்டபோது எந்த அச்சமுமின்றி அவர்களை சற்றும் பொருட்படுத்தாமல் அவர்களிடமிருந்து முகம் திருப்பிக் கொண்டார்கள். அவர்கள் நெருப்பில் வீசப்பட்டார்கள். எனினும் சிங்கங்களின் அச்சத்தால் பின்வாங்கவில்லை. இது நல்லவர்களின் வாழ்க்கையாகும். அவர்கள் வாள்களுக்கு அஞ்சுவதில்லை. அவர்கள் நயவஞ்சகத்தை பெரும் பாவம் என்றும், வெட்கக்கேடு என்றும், வரம்பு மீறுதல் என்றும் கருதுகின்றனர். ஒருவேளை அவர்களிடமிருந்து இதுபோன்ற இழிவான செயல் அணு அளவு வெளிப்பட்டிருந்தாலும் கூட அவர்கள் பாவமன்னிப்பு கோரியவாறு அல்லாஹ்வின் பக்கம் முகம் திருப்பி விடுவார்கள்.

சித்தீக் (ரலி) மற்றும் ஃபாரூக் (ரலி) அவர்களை காஃபிர்கள் என்றும் உரிமைகளை பறிக்கக் கூடியவர்கள் என்றும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிந்த பிறகும் அவர்களிடம் எவ்வாறு அன்னார் பைஅத் செய்தார்கள்? என்பது ஆச்சரியமளிக்கிறது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அந்த இருவரின் தோழமையிலும் ஒரு நீண்ட நெடிய காலம் வரை இருந்து வந்தார்கள். முழுமையான நன்றியுணர்வுடனும் பற்றுடனும் அவ்விருவருக்கும் கட்டுப்பட்டு நடந்தார்கள். அதில் அவர்கள் எந்வொரு பலவீனத்தையும் வெளிப்படுத்தவில்லை. மேலும் எந்தவொரு வெறுப்பையும் வெளிப்படுத்தவில்லை. அதற்கு வேறு எந்தவொரு காரணமும் தடையாக அமையவில்லை. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் ஈமான் மற்றும் இறையச்சமும் அன்னாரை அதிலிருந்து தடுக்கவில்லை. எல்லாவற்றிற்கும் மேல், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இந்த சான்றோர்களின் குழப்பம் மற்றும் நிராகரிப்பை நன்கு அறிந்திருந்தார்கள். அந்நிலையில் அன்னாருக்கும் அரபு சமுதாயங்களுக்கும் மத்தியில் எவ்வித தடுப்புச் சுவரும் இருக்கவில்லை. எவ்விதமான பெரிய நீளமான திரையும் இல்லை. அன்னார் கைதியாகவும் இருக்கவில்லை.

## திருக்குர்ஆனிலிருந்து...

நாம் விரும்பியிருந்தால், அவர்களின் இடங்களிலேயே அவர்களின் நிலைகளை மாற்றியிருப்போம். பின்னர் அவர்களால் முனனோக்கிச் செல்லவோ திரும்பிச் செல்லவோ இயலாது. (36:68)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

(அவ்வாறிருக்க) அன்னார் அரேபியாவின் கிழக்கிலோ அல்லது மேற்கிலோ ஏதாவதொரு பக்கம் ஹிஜ்ரத் செய்து சென்றிருக்க வேண்டும். அது அன்னாரின் மீது கடமையாக இருந்தது. (சூழல்கள் அவ்வாறு இருந்தது என்றால், பலவந்தம் இருந்தது என்றால் அன்னாரால் ஹிஜ்ரத் செய்திருக்க முடியும். அப்படி எந்தவொரு பலவந்தமும் அன்னாருக்கு இருக்கவில்லை.) மேலும் மக்களை போருக்கு தயார்படுத்தியிருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹிஜ்ரத் மட்டும் செய்திருக்கக்கூடாது. மாறாக, மக்களை போருக்கு ஆயத்தப்படுத்தியிருக்க வேண்டும். இவர்கள் முர்தத் மற்றும் நிராகரிப்பாளர்கள் ஆவர். எனவே இவர்களுக்கு எதிராக போரிடுங்கள் என்று கூறியிருக்க வேண்டும்.

குடிமக்களுக்கு போர் புரிய கவனமூட்டியிருக்க வேண்டும். தனது தெளிவான பேச்சாற்றலின் மூலமாக அவர்களை தனக்கு ஆதரவாக ஒன்று சேர்த்திருக்க வேண்டும். பின்னர் முர்ததான மக்களுக்கு எதிராக போரிட்டிருக்க வேண்டும். முஸைலமா கத்தாபை சுற்றி சுமார் ஒரு லட்சம் பேர் ஒன்றுகூடி இருந்தனர். அவ்வாறிருக்க ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அந்த உதவிக்கு மிகவும் தகுதி படைத்தவராக இருந்தார்கள். போருக்கு ஒன்றுதிரட்டுவதும் மிகவும் பொருத்தமானதாக இருந்தது. பிறகு ஏன் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் நிராகரிப்பாளர்களை பின்தொடர்ந்தார்கள்? அதாவது எவர்களை நீங்கள் காஃபிர்கள் என்று கூறுகின்றீர்களோ அவர்களை ஏன் பின்பற்றினார்கள்?

அன்னார் அதிகாரத்தில் சோம்பேறி மக்களைப் போன்று வீணாக அமர்ந்திருந்தார்கள். முஜாஹித்களைப்போல அன்னார் ஏன் எழுந்து நிற்கவில்லை? வெற்றிக்கான அனைத்து அடையாளங்களும் தென்பட்ட பிறகு போருக்கு புறப்படுவதிலிருந்து என்ன விஷயம் அன்னாரை தடுத்து நிறுத்தியது? போருக்கு அழைப்பு விடுவதற்கும், உண்மைக்கு உதவி செய்வதற்கும் மக்களை அழைப்பதற்கு அன்னார் ஏன் எழுந்து நிற்கவில்லை? தெளிவான பேச்சாற்றல் கொண்டவராகவும், அறிவுரை வழங்கக் கூடியவராகவும் அன்னார் தனது சமுதாயத்தில் திகழவில்லையா? தனது அழகிய கூற்றின் அழுத்தத்தினாலும், தனது பார்வையாளர்களை பேச்சுக்களால் தாக்கத்தை ஏற்படுத்தி அன்னாரால் ஒன்றுகூட்டியிருக்க முடியும். அதற்கு அன்னாருக்கு வெறும் ஒரு மணி நேரம் போதுமானதாகும்.

இன்னும் கூறப்போனால், அதைவிட குறைவான நேரமே அன்னாருக்கு தேவைப்பட்டது. மக்கள் ஒரு பொய்யர் மற்றும் தஜ்ஜாலை சுற்றி ஒன்றுகூடி விட்டார்கள் என்றால் பின்னர் பெரும் பெரும் பணிகளை செய்யக்கூடியவரும், இறைவனின் உதவியை பெற்றிருந்தவரும், அனைத்துலக இறைவனின் நேசத்திற்குரியவராக திகழ்ந்தவருமான அல்லாஹ்வின் சிங்கத்தின் (ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின்) நிலை வேறொன்றாக இருந்திக்க வேண்டும். ஆனால் மிகவும் விநோதமான விஷயம் என்னவென்றால், அன்னார் பைஅத் செய்தவர்களை சார்ந்தவராக இருப்பதற்கு மட்டும் உடன்படவில்லை. அதாவது வெறும் பைஅத் மட்டும் செய்யவில்லை. மாறாக, ஒவ்வொரு தொழுகையையும் இரண்டு ஷேக்குகளுக்குப் (அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோருக்குப்) பின்னால் தொழுது வந்தார்கள். எந்தவொரு நேரத்திலும் கூட அவர்களை அன்னார் எதிர்க்கவில்லை. மேலும் முறையீடு செய்பவர்களைப் போன்று விலகி நிற்கவுமில்லை. அவர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் அன்னார் பங்கு

### திருக்குர்ஆனிலிருந்து...

நாம் மனிதனைக் (கேவலம்) ஒரு விந்துத் துளியிலிருந்து படைத்திருப்பதை அவன் பார்க்கவில்லையா? பின்னர் அவன் வெளிப்படையான சச்சரவு செய்பவனாகி விடகின்றான். (36:78)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

பெற்றார்கள். அவர்களின் வாதங்களை ஒப்புக் கொண்டார்கள். மேலும் தனது முழுமையான தைரியம் மற்றும் வலிமையால் அவர்களுக்கு உதவி செய்தார்கள். ஒருபோதும் அவர்களை விட்டு விலகி நிற்கவில்லை.

எனவே சற்று சிந்தியுங்கள். மேலும் எனக்கு கூறுங்கள். நேர்வழி பெற்ற மற்றும் சிந்தனையாளர்களின் அடையாளங்கள இவை தானா? மேலும் பொய்யர் மற்றும் இட்டுக்கட்டக்கூடியவர்கள் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிந்திருந்த பிறகும் அவர்களுக்கு கட்டுப்பட்டு நடந்தார்களா? அவ்வாறென்றால், அன்னாரின் பார்வையில் உண்மையும், பொய்யும் சமமானதாக இருந்ததா? என்பதையும் சற்று சீர்தூக்கிப் பாருங்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உண்மைக்காக எரிக்கப்பட்டாலும், நாசத்திற்கு உள்ளாக்கப்பட்டாலும், தூள் தூளாக்கப்பட்டாலும் சரியே. ஆற்றலும், வலிமையும் படைத்த இறைவன் மீது நம்பிக்கை கொண்ட மக்கள் ஒரு நிமிடத்திற்கு கூட நயவஞ்சக பாதைக்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள் என்பதை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிந்திருக்கவில்லையா?

(ஸிர்ருல் குலஃபா, ரூஹானி கஸாயின் தொகுதி 8 பக்கம் 349–351)

எனவே ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஒருபோதும் தனது முந்தைய கலீஃபாக்களை எதிர்க்கவில்லை. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் பைஅத் செய்யவில்லை என்று அன்னாரைப் பற்றி நீங்கள் கூறுகின்ற விஷயம் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் அந்தஸ்தை உயர்த்துவதற்கு பகரமாக குறைக்கின்றது என்பதையும், மாறாக, அன்னார் அவர்களிடம் பைஅத் செய்திருந்தார்கள் என்பதையும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் தெளிவுபடுத்தி விட்டார்கள். அன்னாருக்கு முன்பாக மூன்று கலீஃபாக்கள் கழிந்திருக்கின்றார்கள். அந்த மூன்று கலீஃபாக்களின் காலகட்டத்தில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஆற்றிய தொண்டுகள் என்ன?

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்த உடன் அரேபியாவைச் சேர்ந்த ஏராளமான கோத்திரத்தினர் முர்ததாகி விட்டனர். மதீனாவிலும் நயவஞ்சகர்கள் தலை தூக்கினர். அபூ ஹனீஃபிகா மற்றும் யமா மஹ் கோத்திரத்தின் ஏராளமான மக்கள் முஸைலமா கத்தாப் உடன் சேர்ந்து கொண்டார்கள். அதே நேரத்தில் பனூ அஸத் 'தே' மற்றும் ஏனைய கோத்திரத்தைச் சேர்ந்த ஏராளமான மக்கள் துலைஹா அஸதிகே என்பவனுக்கு கீழ் ஒன்று கூடினர். அவனும் முஸைலிமாவைப் போன்று நபித்துவத்திற்கான வாதம் செய்திருந்தான். துன்பங்கள் மிகவும் அதிகரித்திருந்தன. நிலைமை மிகவும் மோசமாகி இருந்தது.

அந்நிலையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படையை அனுப்பி வைத்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் மிகக் குறைவான மக்களே எஞ்சியிருந்தனர். அந்த தருணத்தில் ஏராளமான காட்டரபிகளின் உள்ளம் மதீனாவை கைப்பற்ற துடித்தது. மதீனாவின் மீது தாக்குதல் நடத்துவதற்கு அவர்கள் திட்டமும் தீட்டியிருந்தனர். எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மதீனாவில் நுழைகின்ற பல்வேறு வழிப்பாதைகளிலும் மதீனாவைச் சுற்றிலும் காவலாளிகளை நியமனம் செய்தார்கள். அவர்கள் தத்தமது படையுடன் மதீனாவை சுற்றிலும் பாதுகாப்பு கொடுத்தவாறு இரவைக் கழித்து வந்தனர். அந்த காவலாளிகளின் மேற்பார்வையாளர்களாக ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப், சுபைர் பின் அவாம், தல்ஹா பின் அப்தில்லாஹ், சஅத் பின் அபீ வக்காஸ், அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் மற்றும் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

(அல்பதாயத்து வல்நஹானிய்யா தொகுதி 7 பக்கம் 307–308 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது பாதுகாப்பு பணிக்காக நியமிக்கப்பட்டிருந்த அந்த படையின் ஒரு குழுவிற்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள்

கண்காணிப்பாளராக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரண செய்தி பரவியபோது பெரும்பாலான அரபு கோத்திரங்கள் முர்தத் ஆகிவிட்டன. மேலும் ஸக்காத் கொடுக்க மறுக்க தொடங்கி விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அத்தகைய மக்களுடன் போர் புரிய எண்ணினார்கள்.

உர்வா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரை தம்முடன் அழைத்துக் கொண்டு மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். அப்போது நஜத் எனும் இடத்தின் ஓர் உயர்ந்த இடத்தில் அமைந்திருந்த கிணற்றை சென்றடைந்ததும் காட்டரபிகள் தனது மனைவி மக்களை அழைத்துக் கொண்டு அங்கிருந்து ஓடி விட்டனர். அசல் விஷயம் என்னவென்றால், ஒரு பக்கம் அவர்கள் முஸ்லிம்கள் என வாதிட்டனர். முழுவதுமாக முர்தத் ஆகவில்லை. மற்றொரு பக்கம் ஸக்காத் கொடுக்க மறுத்து விட்டார்கள். எனவே போர் செய்யப்பட்டது. அவர்கள் முர்தர் ஆகிவிட்டதன் காரணமாக தண்டனை வழங்கப்பட்டது என்பது சரியல்ல.

எனவே அவர்கள் ஓடிவிட்டதால் நாம் நமது மனைவி மக்களிடம் திரும்பிச் சென்று விடுவோம். படைக்கு வேறொருவரை அமீராக நியமனம் செய்து விடுங்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் மக்கள் கூறினர். மக்கள் வலியுறுத்தியதால் அன்னார் ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்களை படைக்கு அமீராக நியமனம் செய்தார்கள். மேலும் இஸ்லாத்தின் மீது அவர்கள் நம்பிக்கை கொண்டு விட்டால், மேலும் ஸக்காத் கொடுத்து விட்டால் நீங்கள் திரும்பி வந்து விடுங்கள். அதாவது அவர்கள் பைஅத்தில் திரும்பி வந்து விட்டால், ஸக்காத் கொடுத்து விட்டால் உங்களில் எவர் திரும்பி வர விரும்புகின்றாரோ அவர் வந்து விடட்டும் என்று அன்னாரிடம் கூறினார்கள். இதன் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மதீனாவிற்கு திரும்பி விட்டார்கள்.

(தாரீகுல் குலஃபா பக்கம் 61)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தனது கிலாஃபத் காலகட்டத்தில் சில பயணங்களை மேற்கொண்டபோது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தமது இடத்தில் மதீனாவின் அமீராக நியமனம் செய்திருந்தார்கள் என்பது வரலாற்றிலிருந்து நிரூபணமாகின்றது. எனவே தாரீகே திப்ரி புத்தகத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஜிஸ்ர் சம்பவத்தின்போது அதாவது ஈரானிய படைகளுக்கு எதிரில் முஸ்லிம்களுக்கு ஒரு வகையான கஷ்டத்தை சந்திக்க நேரிட்டது. அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தான் சுயம் இஸ்லாமிய படையுடன் ஈரானிய எல்லை வரை செல்ல வேண்டும் என்று மக்களின் ஆலோசனையுடன் தீர்மானித்தார்கள். அப்போது அன்னார் தமக்குப் பிறகு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை மதீனாவின் கவர்னராக நியமனம் செய்தார்கள்.

(ஹக்குல் யகீன், அன்வாருல் உலூம் தொகுதி 9 பக்கம் 383,384)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறினார்கள்: இஸ்லாத்திற்கு ஏற்பட்ட மிகப்பெரிய மற்றும் அபாயகரமான தோல்வி என்பது ஜிஸ்ர் போரில் ஏற்பட்டது. ஈரானியர்களை எதிர்கொள்வதற்காக முஸ்லிம்களின் ஒரு பெரும் படை சென்றது. ஈரானிய படை வீரர்கள் நதிக்கரையில் முகாமிட்டு முஸ்லிம்களுக்காக காத்திருந்தார்கள். இஸ்லாமிய படை ஆவேசமாக முன்னேறி அவர்கள் மீது தாக்குதல் நடத்தி விட்டது. அங்கிருந்தவர்களை பின்வாங்கச் செய்து முஸ்லிம்கள் முன்னேறி விட்டனர். ஆனால் ஈரானிய படையின் கமாண்டர் மிகவும் தந்திரக்காரராக இருந்தார். அவர் படையை ஒரு பக்கமாக அனுப்பி பாலத்தை கைப்பற்றி விட்டார். மேலும் முஸ்லிம்கள் மீது திடீரென தாக்குதல் தொடுத்து விட்டார். முஸ்லிம்கள் சூழ்நிலையை கருத்தில் கொண்டு பின்வாங்கினார்கள். ஆனால் பாலத்தை எதிரிகள் கைப்பற்றியிருப்பதை முஸ்லிம்கள் கண்டனர்.

எனவே பதற்றமடைந்து வேறொரு பக்கம் சென்றனர். அப்போது எதிரி மிகக் கடுமையான தாக்குதல் நடத்தினான். அப்போது முஸ்லிம்களின் ஒரு பெரும் எண்ணிக்கை நதியில் குதிக்கும் நிர்பந்தத்திற்கு ஆளானது. மேலும் மாண்டு போனது. முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இந்த பாதிப்பு எவ்வளவு அபாயகரமானதாக இருந்ததென்றால் மதீனா கூட அதனால் அதிர்ந்து போனது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனாவாசிகளை ஒன்று கூட்டினார்கள். மேலும் இப்போது மதீனாவிற்கும் ஈரானிற்கும் இடையில் எந்த தடையும் எஞ்சியிருக்கவில்லை. மதீனா முற்றிலும் நிராயுதபாணியாக உள்ளது. எதிரிகள் சில நாட்களில் இங்கு வந்தடையக்கூடும். எனவே நான் படைத்தளபதியாக அங்கு செல்கின்றேன் என்று கூறினார்கள்.

எஞ்சிய மக்களும் இந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அதாவது ஒருவேளை துரதிஷ்டவசமாக தாங்கள் ஷஹீதாகி விட்டால் முஸ்லிம்கள் சிதறுண்டு போய் விடுவார்கள். முஸ்லிம்களின் ஒற்றுமை முற்றிலும் சீர்குலைந்து விடும். எனவே நீங்கள் வேறொருவரை அங்கு அனுப்புங்கள். தாங்கள் சுயம் அங்கு செல்லக்கூடாது என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சிரியாவில் ரோமானியர்களுடன் போரில் மும்முரமாக இருந்த ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களுக்கு, உங்களால் எவ்வளவு படையை அனுப்ப முடியுமோ அனுப்பி வையுங்கள். ஏனென்றால் தற்போது மதீனா முற்றிலும் பாதுகாப்பற்றதாக ஆகி விட்டது. எதிரிகளை உடனடியாக நாம் தடுத்து நிறுத்தாவிட்டால் அவர்கள் மதீனாவை கைப்பற்றி விடுவார்கள் என்று கடிதம் எழுதினார்கள்.

(மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா கே ஸாலானா இஜ்திமா....
அன்வாருல் உலூம் தொகுதி 22 பக்கம் 56,57)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் குழப்பங்கள் ஏற்பட்டன. அதனைக் களைவதற்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அன்னாருக்கு கலப்பற்ற ஆலோசனைகளை வழங்கினார்கள். ஒரு முறை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கூச்சல் குழப்பத்திற்கான அசல் காரணம் என்ன? அதனைக் களைவதற்கு என்ன வழி உள்ளது? என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். அன்னார் (ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள்) மிகவும் கலப்பற்ற தன்மையுடனும், சுதந்திரத்துடனும் இந்த கருத்தை வெளிப்படுத்தினார்கள். அதாவது தங்களுடைய ஆட்சியாளர்களின் நடுநிலையற்ற செயல்பாடுகளின் விளைவாகத்தான் இந்த நிம்மதியற்ற அனைத்து நிலைமையும் தற்போது ஏற்பட்டிருக்கின்றது என்று கூறினார்கள்.

**அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், ஆட்சியாளர்களை தேர்ந்தெடுப்பதில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கருத்தில் கொண்ட அதே பண்புகளைத்தான் நான் மேற்கொண்டிருந்தேன் என்று கூறினார்கள். அவ்வாறிருக்க அவர்களை பொதுவாக புறக்கணிப்பதற்கான காரணம் புரியவில்லை என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஆம் சரிதான்! ஆயினும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அனைத்து விவகாரங்களின் முழுமையையும் தனது கரங்களில் வைத்திருந்தார்கள். மேலும் கட்டுப்பாடுகள் எவ்வளவு கடினமானதாக இருந்ததென்றால், அரபு நாட்டின் அடங்காத ஒட்டகம் கூட அடங்கி விடும். அன்னார் மிகக் கடுமையாக கண்காணித்து வந்தார்கள். ஆனால் அதற்கு மாற்றமாக தேவைக்கு அதிகமாக தாங்கள் மென்மை காட்டுகின்றீர்கள். தங்களின் ஆட்சியாளர்கள் தங்களின் மென்மையிலிருந்து பயனடைந்தவாறு தமது விருப்பப்படி நடவடிக்கை எடுக்கின்றனர். மேலும் அது பற்றிய தகவல் கூட தங்களுக்கு கிடைப்பதில்லை.**

### திருக்குர்ஆனிலிருந்து...

எவனது கையில் எல்லாவற்றின் ஆட்சியும் உள்ளதோ அவன் தூயவன். அவனிடமே நீங்கள் எல்லாரும் திரும்பிக் கொண்டு செல்லப்படுவீர்கள். (36:84)

Mohaideen Ali & M.Sabahul Islam
Melapalayam

**அதன் விளைவாக ஆட்சியாளர்கள் செய்கின்ற அனைத்தும் கிலாஃபத் அவையின் கட்டளைகளை நிறைவேற்றும் விதமாக இருக்கின்றது என்று மக்கள் புரிந்து கொள்கின்றனர். இவ்வாறு அனைத்து நடுநிலையற்ற செயல்களுக்கும் தாங்கள் இலக்காகி விடுகின்றீர்கள் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்.**

எகிப்தியர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வீட்டை முற்றுகையிட்டிருந்தபோது எந்த அளவுக்கு தீவிரத்தை மேற்கொண்டிருந்தார்கள் என்றால் அன்னாருக்கு உணவு மற்றும் குடி நீரையும் தடுத்து நிறுத்தி இருந்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு தெரிய வந்தபோது அன்னார் முற்றுகையிட்ட நபரிடம் சென்றார்கள். நீங்கள் எப்படிப்பட்ட முற்றுகையை செய்திருக்கின்றீர்கள் என்றால் அது இஸ்லாத்திற்கு மட்டுமல்ல; மாறாக மனிதத்துவத்திற்கே எதிரானதாகும் என்று அந்த முற்றுகையாளர்களிடம் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றி இந்த நபர் உங்களுக்கு அப்படி என்ன பாதிப்பை ஏற்படுத்தி விட்டார். நீங்கள் இந்த அளவுக்கு அவருடன் கடுமையாக ஏன் நடக்கின்றீர்கள்? என்றும் கேட்டார்கள். முற்றுகையாளர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் பரிந்துரையை சற்றும் பொருட்படுத்தவில்லை. முற்றுகையை தளர்த்துவதற்கு முற்றிலும் நிராகரித்து விட்டார்கள். எனவே ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கோபத்தில் தனது தலைப்பாகையை வீசி விட்டு திரும்பிச் சென்று விட்டார்கள்.

(சீரத்துஸ் ஸஹாபா தொகுதி 1 பக்கம் 207,208)

மக்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வீட்டை முற்றுகையிட்டிருந்தார்கள். அவர்களுக்கு குடி தண்ணீரை தடுத்து நிறுத்தி இருந்தார்கள். அப்போது அன்னார் (ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள்) மேலே இருந்து எட்டிப் பார்த்தார்கள். உங்களில் அலி இருக்கின்றாரா? என்று அன்னார் கேட்டார்கள். அதற்கு இல்லை என்று மக்கள் கூறினர். பின்னர் சஅத் இருக்கின்றாரா? என்று கேட்டார்கள். இல்லை என்று பதில் கிடைத்தது. சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு பின்னர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் உங்களில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் சென்று எமக்கு தண்ணீருக்கான ஏற்பாட்டைச் செய்யுமாறு கூறுவதற்கு எவரும் உள்ளாரா? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு இந்த தகவல் கிடைத்ததும் அன்னார் மூன்று பானைகளில் தண்ணீரை நிறைத்து அன்னாரின் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால் கிளர்ச்சியாளர்களின் எதிர்ப்பின் காரணமாக அந்த தண்ணீர் பானைகள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வீட்டை சென்றடைய முடியவில்லை. கிளர்ச்சியாளர்கள் அதனை தடுத்துக் கொண்டிருந்தனர். அந்த தண்ணீர் பானைகளை கொண்டு சேர்க்கும் முயற்சியில் பனூ ஹாஷிம் மற்றும் பனூ உமைய்யாவைச் சேர்ந்த சில அடிமைகள் காயமுற்றனர். எனினும் இறுதியில் தண்ணீர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வீட்டிற்கு சென்றடைந்தது.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கொலை செய்வதற்கு திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்பதை அறிந்தவுடன் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தனது மகன்களான ஹஸ்ரத் இமாம் ஹஸன் (ரலி) மற்றும் இமாம் ஹுஸைன் (ரலி) ஆகியோரிடம் வாள்களை எடுத்துக் கொண்டு செல்லுங்கள். மேலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வீட்டின் கதவின் பக்கம் நின்று கொள்ளுங்கள். எந்தவொரு தீங்கிழைப்பவரும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை சென்றடைந்து விடக்கூடாது என்று கூறினார்கள். இதைக்கண்ட கிளர்ச்சியாளர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வீட்டின் கதவுகளின் மீது அம்புகளை எய்யத் தொடங்கினர். அதன் காரணமாக ஹஸ்ரத் ஹஸன் (ரலி) மற்றும் முஹம்மத் பின் தல்ஹா ஆகியோர் இரத்த காயம் அடைந்தனர். இதற்கிடையில் முஹம்மத் பின் அபூபக்ர் தனது இரண்டு நண்பர்களுடன் ஓர் அன்ஸாரியின் வீட்டிலிருந்து ஒளிந்து ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வீட்டில் குதித்து விட்டான். மேலும் அன்னாரை ஷஹீதாக்கி விட்டான்.

இந்த செய்தி ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு சென்று சேர்ந்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டு விட்டார்கள் என்பதை நேரில் வந்து பார்த்தார்கள். மேலும் தனது இரண்டு மகன்களிடமும் நீங்கள் இருவரும் வாசலில் பாதுகாப்பு கொடுத்துக் கொண்டிருக்கின்றபோது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் எவ்வாறு ஷஹீதாக்கப்பட்டு விட்டார்கள்? என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கேட்டார்கள். இவ்வாறு கூறியவாறு அன்னார் ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் கன்னத்தில் அறைந்தார்கள். மேலும் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களின் நெஞ்சில் அடித்தார்கள். மேலும் முஹம்மது பின் தல்ஹா மற்றும் அப்துல்லாஹ் பின் ஸுபைர் ஆகியோரை கடிந்து கொண்டார்கள். மேலும் கோபத்தின் நிலையில் அங்கிருந்து தனது வீட்டிற்கு சென்று விட்டார்கள்.

(தாரீகுல் குலஃபா பக்கம் 123,124 – 1999 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் கிதாபுல் அரபிய்யில் அச்சிடப்பட்டது)

ஷத்தாத் பின் அவ்ஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: யவ்முத் தார் அன்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் முற்றுகையாளர்கள் கடினம் காட்டினார்கள். (ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கிளர்ச்சியாளர்கள் அன்னாரின் வீட்டில் முற்றுகையிட்டு மிகவும் கொடூரமாக ஷஹீதாக்கிய நாளை யம்முத் தார் என்று கூறுவார்கள்.) அந்த நாளில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மக்களை எட்டிப் பார்த்தார்கள். மேலும் அல்லாஹ்வின் அடியார்களே! என்று அன்னார் கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தனது வீட்டிலிருந்து வெளியில் சென்று கொண்டிருந்ததை நான் கண்டேன். அன்னார் அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தலைப்பாகையை அணிந்திருந்தார்கள். மேலும் தனது வாளை தொங்கவிட்டிருந்தார்கள். அன்னாருக்கு முன்னால் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரின் கூட்டம் இருந்தது. அதில் ஹஸ்ரத் ஹஸன் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் ஆகியோர் இருந்தனர். எந்த அளவுக்கென்றால் கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை அங்கிருந்து அகற்றி விட்டார்கள். பின்னர் அந்த மக்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வீட்டில் நுழைந்தார்கள்.

மேலும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அமீரல் மூமினீன் அவர்களே! உங்கள் மீது சாந்தி உண்டாவதாக. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்களை அழைத்துக் கொண்டு நிராகரிப்பாளர்களுடன் போர் செய்தபோது அல்லாஹ்வின் தூதரின் மார்க்கத்திற்கு உயர்வும், உறுதிப்பாடும் கிடைத்தது. இறைவன் மீது ஆணையாக! இந்த மக்கள் உங்களை நிச்சயம் கொலை செய்யக்கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்பதை நான் காண்கின்றேன். எனவே தாங்கள் இவர்களுடன் போர் புரிவதற்கு எங்களுக்கு கட்டளையிடுங்கள் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எவர் அல்லாஹ் உண்மையாளன் என்று கருதுகின்றாரோ மேலும் அவன் மீது எனக்கு உரிமை இருக்கின்றது என்று எவர் கருதுகின்றாரோ அத்தகைய ஒவ்வொரு நபரிடமும் நான் அல்லாஹ்வுக்காக கூறுகின்றேன். எனக்காக எவருடைய இரத்தத்தையும் அவர் சிந்தக்கூடாது. மேலும் எனக்காக அவர் தனது இரத்தத்தையும் சிந்தக்கூடாது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மீண்டும் அதே விண்ணப்பத்தை செய்தார்கள். அப்போதும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அதே பதிலையே வழங்கினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அப்போது நான் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வீட்டிலிருந்து வெளியேறுவதை கண்டேன். அன்னார் வெறியேறும்போது அல்லாஹ்வே! நாங்கள் எங்களால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் செய்து விட்டோம். இதனை நீ நன்கு அறிவாய் என்று கூறிக் கொண்டிருந்தார்கள். பின்னர் அன்னார் மஸ்ஜிது நபவிக்கு வருகை தந்தார்கள். அப்போது தொழுகைக்கான நேரமாக இருந்தது.

அபுல் ஹஸனே! (ஹஸனின் தந்தையே) முன்னால் வாருங்கள்.

மக்களுக்கு தொழுகை நடத்துங்கள் என்று மக்கள் கூறினர். அதற்கு இமாம் சிறைப்படுத்தப்பட்டுள்ளபோது என்னால் உங்களுக்கு தொழுகை நடத்த முடியாது. நான் தனியாகவே தொழுது கொள்வேன் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தனியாக தொழுது விட்டு திரும்பிச் சென்று விட்டார்கள். பின்னர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் மகன் வருகை தந்தார். மேலும் எனது தந்தையே! இறைவன் மீது ஆணையாக! எதிரிகள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வீட்டின் மீது தாக்குதல் தொடுத்து விட்டனர் என்று கூறினார்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ இறைவன் மீது ஆணையாக! அவர்கள் அன்னாரை கொலை செய்து விடுவார்கள் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் எங்கே (அதாவது ஷஹாதத் சம்பவத்திற்குப் பிறகு) இருப்பார்கள்? என்று மக்கள் கேட்டனர். அதற்கு அல்லாஹ்வின் மீது ஆணையாக! சொர்க்கத்தில் என்று அன்னார் பதிலளித்தார்கள். அன்னாரைக் கொலை செய்தவர்கள் எங்கே இருப்பார்கள்? என்று மக்கள் கேட்டனர். அபுல் ஹஸனே! இந்த மக்கள் எங்கே செல்வார்கள்? என்று கேட்கப்பட்டது. இறைவன் மீது ஆணையாக! நெருப்பில் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள். இவ்வாறு அன்னார் மூன்று முறை கூறினார்கள்.

(ரியாஸுன் நஸரஃ தொகுதி 3 பக்கம் 68,69)

கிளர்ச்சியாளர்கள் மதீனாவை முற்றுகையிட்டு விட்டனர். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அந்த சூழலை விளக்கியவாறு இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: அதாவது எகிப்துவாசிகள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் சென்றனர். அந்த நேரத்தில் மதீனாவிற்கு வெளியில் படையின் ஒரு பகுதிக்கு அன்னார் தலைமை தாங்கிக் கொண்டிருந்தார்கள். எதிரிகளை அழிப்பதற்கு ஆயத்தமாக இருந்தார்கள். அப்போது அன்னாரிடம் சென்று, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தவறான நிர்வாகத்தின் காரணமாக தற்போது கிலாஃபத்திற்கு தகுதி படைத்தவராக இல்லை. நாங்கள் அவரை அகற்றுவதற்காக வந்துள்ளோம். தாங்கள் அன்னாருக்கு பிறகு இந்த பொறுப்பை ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகின்றோம் என்று அவர்கள் கூறினர்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் நயவஞ்சகர்களின் இந்த கூற்றை கேட்டு விட்டு மார்க்க ரோஷத்தை வெளிப்படுத்தியவாறு அந்த நபர்களை விரட்டி விட்டார்கள். மேலும் அவர்களுடன் கடினமாக நடந்து கொண்டார்கள். மேலும் அன்னார் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பாக துல்மர்வா மற்றும் தூஹுஷ்ஃப் ஆகிய இடங்களில் முற்றுகையிட இருக்கும் படைகளை குறிப்பிட்டு அவர்களை சபித்துள்ளார்கள். எனவே இறைவன் உங்களை நாசமாக்குவானாக. நீங்கள் திரும்பிச் சென்று விடுங்கள் என்று கூறினார்கள். அதற்கு அந்த மக்கள் மிகவும் நல்லது! நாங்கள் திரும்பிச் சென்று விடுகின்றோம் என்று கூறியவாறு திரும்பிச் சென்று விட்டனர்.

(இஸ்லாம் மே இக்திலாஃபாத் கா ஆகாஸ், அன்வாருல் உலூம் தொகுதி 4 பக்கம் 299)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத் மற்றும் அதற்குப் பிறகு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் செய்யப்பட்ட கிலாஃபத் பைஅத் தொடர்பாக நான் ஏற்கனவே ஒரிடத்தில் சுருக்கமாக எடுத்துரைத்துள்ளேன். இப்போது இங்கு சுருக்கமாக சம்பவத்தை கூறி விடுகின்றேன். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டபோது அனைத்து மக்களும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் ஓடோடி வந்தார்கள். அவர்களில் சஹாபிகளும், ஏனைய மக்களும் அடங்குவர். அவர்கள் அனைவரும் அலி அவர்களே அமீருல் மூமினீன் ஆவார்கள் என்று கூறிக் கொண்டிருந்தார்கள். அந்த மக்கள் அன்னாரின் வீட்டில் அன்னாரிடம் வருகை தந்திருந்தார்கள். மேலும் தாங்கள் எங்களிடம் பைஅத் வாங்குங்கள். தங்களது கரத்தை நீட்டுங்கள் என்று கூறினர். ஏனென்றால் நீங்கள்தான் அதிகமாக உரிமை படைத்தவராக இருக்கின்றீர்கள் என்றும் கூறினர்.

அதற்கு இது உங்களது பணியல்ல. மாறாக இது பதர் போர் சஹாபிகளின் பணியாகும். பதர் போர் சஹாபிகள் எந்த நபரின் மீது திருப்தி கொள்வார்களோ அவரே கலீஃபாவாக இருப்பார் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது அனைத்து நபர்களும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் வருகை தந்து நாங்கள் உங்களை விட வேறு எவரையும் இதற்கு உரிமை படைத்தவராக கருதவில்லை. எனவே தாங்கள் உங்களது கரத்தை நீட்டுங்கள். நாங்கள் உங்களிடம் பைஅத் செய்ய வேண்டும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தல்ஹா மற்றும் ஸுபைர் எங்கே? என்று கேட்டார்கள்.

எல்லாரையும் விட முதலில் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் வாய்மொழியாக பைஅத் செய்தார்கள். மேலும் எல்லாரையும் விட முதன் முதலில் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் கரத்தில் பைஅத் செய்தார்கள். இதைக் கண்டபோது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் பள்ளிவாசலை நோக்கி சென்றார்கள். மேலும் மேடையில் ஏறி நின்றார்கள். ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் சார்பாக முதல் முதலில் மேடையில் ஏறிய நபராக இருந்தார்கள். மேலும் அன்னாரிடம் பைஅத் செய்தார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் பைஅத் செய்தார்கள். பின்னர் எஞ்சிய சஹாபிகள் பைஅத் செய்தனர்.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 107 – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட பிறகு நிகழ்ந்த சம்பவங்களை விளக்குகின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டபோது குழப்பவாதிகள் பைத்துல் மாலை கொள்ளையடித்தார்கள். மேலும் எவர் எதிர்ப்பாரோ அவர் கொலை செய்யப்படுவார் என்று அறிவிப்பு செய்தனர். மேலும் ஒன்றுகூடுவதற்கும் அனுமதிக்கவில்லை. எவராலும் ஒன்று சேர முடியவில்லை. இன்றைய நாட்களில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்படுவதைப் போன்று தடை உத்தரவுகளை பிறப்பித்திருந்தனர். மதீனாவை அவர்கள் முழுமையாக முற்றுகையிட்டிருந்தனர். எவரையும் வெளியேறுவதற்கு அவர்கள் அனுமதிக்கவில்லை.

வேறொரு வார்த்தையில் கூறுவதாக இருந்தால் இன்றைய நாட்களில் CURFEW அமல்படுத்தப்படுவதைப் போன்று அமல்படுத்தி இருந்தனர். எந்த அளவுக்கென்றால் தாங்கள் அலியை நேசிப்பதாக வாதம் செய்திருந்தபோதிலும் அந்த அலியையும் தடுத்து வைத்திருந்தனர். மதீனாவில் மிகவும் கொள்ளையடித்தனர். நிலைமை இங்கு இவ்வாறு இருந்தது. மற்றொரு பக்கம் அவர்கள் கல்நெஞ்சம் படைத்தவர்கள் என்பதற்கு எத்தகைய ஆதாரத்தை வழங்கினார்கள் என்றால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் போன்ற தூய மனிதரை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புகழ்ந்து பேசியிருந்த மனிதரை கொலை செய்து விட்ட பிறகு கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை. உடலை மூன்று நான்கு நாட்கள் வரை அடக்கம் செய்ய விடவில்லை. கடைசியில் சில சஹாபிகள் ஒன்றிணைந்து இரவில் இரகசியமாக நல்லடக்கம் செய்தனர். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் சில அடிமைகளும் ஷஹீதாகி இருந்தனர். அவர்களின் உடல்களை அடக்கம் செய்வதையும் தடுத்தனர். மேலும் நாய்களுக்கு முன்னால் உடல்களை வீசி விட்டனர்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் அன்னாரது அடிமைகளுடன் இந்த நடவடிக்கையை மேற்கொண்ட பிறகு மதீனாவாசிகளை விட்டு விட்டனர். மதீனாவாசிகளுடன் அவர்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லாமல்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நிச்சயமாக அவன் ஒன்றை நாடினால் 'ஆகுக' என்று கட்டளையிட்டதும், அது ஆ(கத் தொடங்)கி விடுகிறது. (36:83)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

இருந்தது. மேலும் சஹாபிகளும் அங்கிருந்து வெளியேறத் தொடங்கி விட்டார்கள். மதீனாவில் எந்த ஆட்சியாளரும் இல்லாத நிலையில் ஐந்து நாட்கள் இப்படியே கழிந்தன. ஒருவரை நாமே கலீஃபாவாக ஆக்கி விடுவோம். பின்னர் நாம் விரும்பியபடி அவரை பணி செய்ய வைப்போம் என்று குழப்பவாதிகள் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் சஹாபிகளில் எவரும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கொலை செய்தவர்களுக்கு கலீஃபா ஆகுவதை அவர்கள் விரும்பவில்லை. குழப்பவாதிகள் ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) ஆகியோரிடம் மீண்டும் மீண்டும் சென்றனர். அவர்களிடம் நீங்கள் கலீஃபாவாக ஆகிவிடுங்கள் என்று கேட்டனர். ஆனால் அவர்கள் நிராகரித்து விட்டனர். அவர்கள் நிராகரித்து விட்டபோதும் முஸ்லிம்கள் அவர்கள் இருக்கின்றபோது வேறு எவரையும் கலீஃபாவாக ஏற்றுக் கொள்ள தயாராக இல்லை. எனவே குழப்பவாதிகள் அவர்களுக்கு எதிராகவும் பலவந்தம் செய்தனர். ஏனென்றால் ஒருவர் கலீஃபா ஆகவில்லை என்றால் பின்னர் முழு இஸ்லாமிய உலகிலும் தங்களுக்கெதிராக ஒரு புயல் மையம் கொண்டு விடும் என்று குழப்பவாதிகள் எண்ணினர். எனவே இரண்டு நாட்களுக்குள் ஒருவர் கலீஃபாவாக ஆகிவிட்டால் நல்லது; இல்லையென்றால் நாங்கள் ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) போன்ற பெரும் பெரும் நபர்களை கொலை செய்து விடுவோம் என்று கிளர்ச்சியாளர்கள் அறிவிப்பு செய்தனர்.

எவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கொலை செய்து விட்டார்களோ அவர்கள் நம்முடனும், நமது மனைவி மக்களுடனும் என்ன வேண்டுமானாலும் செய்ய துணிந்து விடுவார்கள் என்ற ஆபத்து மதீனாவாசிகளுக்கு ஏற்பட்டது. எனவே அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் சென்றார்கள். தாங்கள் கலீஃபாவாக ஆக வேண்டும் என்று கூறினர். ஆனால் அன்னார் நிராகரித்து விட்டார்கள். மேலும் நான் கலீஃபா ஆகிவிட்டால் நான்தான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கொலை செய்ய ஏற்பாடு செய்தேன் என்று அனைவரும் கூறுவர் என்று கூறினார்கள். மேலும் இந்த சுமையை என்னால் சுமக்க முடியாது என்றும் கூறிவிட்டார்கள். ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களும் இதே கூற்றை கூறினர். மேலும் எவர்களை கலீஃபாவாக ஆகும்படி கூறப்பட்டதோ அந்த சஹாபிகளும் நிராகரித்து விட்டனர்.

இறுதியில் அனைத்து மக்களும் மீண்டும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் வந்தார்கள். என்ன ஆனாலும் சரி நீங்கள் இந்த சுமையை சுமக்க வேண்டும் என்று கூறினர். அப்போது அனைத்து மக்களும் பள்ளிவாசலில் ஒன்றுகூட வேண்டும். மேலும் என்னை ஒப்புக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் நான் இந்த சுமையை சுமக்கின்றேன் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள். எனவே அனைவரும் ஒன்று கூடினர். அவர்கள் ஒப்புக் கொண்டனர். ஆயினும் சிலர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கொலையாளிகளுக்கு தண்டனை கொடுக்காத வரை நாங்கள் எவரையும் கலீஃபாவாக ஒப்புக் கொள்ள மாட்டோம் என மறுத்து விட்டனர். வெளியூர் மக்களின் கருத்தை அறிந்து கொள்ளாதவரை நாங்கள் எவரையும் கலீஃபாவாக ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று வேறு சிலர் கூறினர். ஆயினும் அத்தகைய மக்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது.

இவ்வாறு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கலீஃபா ஆகுவதற்கு ஒப்புக் கொண்டிருந்தார்கள். ஆனால் அன்னாருக்கு என்ன அபாயம் இருந்ததோ அதுவே முடிவாக வெளிப்பட்டது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள்தான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கொலை செய்தார்கள் என்று முழு இஸ்லாமிய உலகமும் கூறத் தொடங்கியது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் ஏனைய அனைத்து சிறப்புகளையும் புறக்கணித்து விட்டாலும் என்னுடைய பார்வையில் இத்தகைய அபாயகரமான சூழலில் கிலாஃபத்தை ஒப்புக் கொண்டது மிகவும் தைரியத்திற்குரிய விஷயமாகும். மேலும் அன்னார் தனது கண்ணியம் மற்றும் இருப்பை இஸ்லாத்திற்கெதிரில் எவ்வகையிலும் பொருட்படுத்தவில்லை. மேலும் இவ்வளவு பெரிய சுமையை சுமந்து கொண்டார்கள். இது மிகவும் போற்றுதலுக்குரியதாகும்.

(வாக்கியாத்தே கிலாஃபத், அன்வாருல் உலூம் தொகுதி 4 பக்கம் 635–637)

அடுத்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத் நிகழ்ந்த பிறகு நடைபெற்ற சம்பவங்களை மற்றோர் இடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஓரிரு நாட்கள் மிகவும் வழிப்பறி மற்றும் கொள்ளைகள் அதிகமாக நிகழ்ந்து வந்தன. ஆனால் வேகம் தணிந்ததும் அந்த கிளர்ச்சியாளர்களுக்கு தங்களது முடிவைப் பற்றிய அச்சமும், கவலையும் ஏற்பட்டது. இனி என்ன நடக்குமோ? என்று அஞ்சினர். ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்கள் மிக வலிமையான நபர் ஆவார். நிச்சயம் இந்த கொலைக்கு பழிவாங்குவார் என்று கருதி சிரியாவை நோக்கி சென்றனர். அங்கு சென்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டு விட்டார்கள். அதற்கு எவரும் பழிவாங்கவில்லை என்று சுயமே புலம்பத் தொடங்கினர். சிலர் தப்பிச் சென்று மக்காவின் வழிப்பாதையில் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை சந்தித்தார்கள். இஸ்லாத்தின் கலீஃபா ஷஹீதாக்கப்பட்டு விட்டார். முஸ்லிம்கள் மௌனமாக இருக்கின்றனர். இது எத்தனை பெரிய அநீதியாகும் என்று கூறினர். சிலர் ஓடிச்சென்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை அடைந்தார்கள். தற்போது துன்பத்திற்கான நேரமாகும். இஸ்லாமிய அரசாங்கம் உடைந்து போகும் அச்சம் உள்ளது. மக்களின் அச்சம் நீங்கவும், அமைதி நிலைபெறவும் தாங்கள் பைஅத் வாங்குங்கள் என்று கூறினர்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இந்த நேரத்தில் இந்த சுமையை தனது தலையில் சுமக்க வேண்டும். இந்தப் பணி நற்கூலிக்கும், இறை திருப்திக்கும் காரணியாக அமையும் என்று மதீனாவிலுள்ள அனைத்து சஹாபிகளும் ஏக மனதாக ஆலோசனை கொடுத்தனர். நாலா புறமிருந்தும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் நிர்பந்தத்திற்குள்ளாக்கப்பட்டார்கள். பல முறை நிராகரித்த பிறகும் நிர்பந்தத்திற்குள்ளாகி அன்னார் இந்த பொறுப்பை சுமந்து கொண்டார்கள். மேலும் பைஅத் வாங்கினார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் இந்த செயல் பெரும் ஞானத்தை உள்ளடக்கியதாக இருந்தது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அந்நேரத்தில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் பைஅத் வாங்காமல் இருந்திருந்தால் அன்னாருக்கும், ஹஸ்ரத் முஆவியாவிற்கும் இடையில் ஏற்பட்ட போரினால் நிகழ்ந்த பாதிப்பை விட இஸ்லாத்திற்கு அதிகமான பாதிப்பு ஏற்பட்டிருக்கும்.

(அன்வாரே கிலாஃபத், அன்வாருல் உலூம் தொகுதி 3 பக்கம் 197,198)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த முடிவுக்கு வருகின்றார்கள். பின்னர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நினைவிற் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களைப் பற்றி கூறப்படும் விஷயம் தவறாகும். அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விட்டு அவர்கள் அதனை முறித்து விட்டனர் என்று கூறுவது தவறாகும். அவர்கள் பைஅத் செய்திருந்தார்கள். ஆனால் அவ்வளவு எளிதாக பைஅத் செய்திருக்கவில்லை. இதனை விளக்கமாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

அவர்கள் பைஅத்தை முறித்து விட்டு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் சென்று விட்டார்கள். அல்லது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு எதிராக போர் புரிந்தார்கள் என்று கூறப்படுவது பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: இது தவறான உதாரணமாகும். இது வரலாற்றை சரியாக அறியாததற்கு சான்றாகும். சம்பவம் இவ்வாறு நடைபெறவில்லை. ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம்

உள்ளத்தால் பைஅத் செய்யவில்லை என்பதற்கு வரலாறு ஏக மனதாக சாட்சியாக உள்ளது. இன்னும் கூறப்போனால் அவர்களிடம் பலவந்தமாக பைஅத் பெறப்பட்டது.

எனவே முஹம்மத் மற்றும் தல்ஹா என்ற இரு அறிவிப்பாளர்களிடமிருந்து திப்ரியில் இவ்வாறு அறிவிப்பு வருகின்றது. அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட பிறகு அமைதியை நிலைநாட்டவும், குழப்பத்தை அழிக்கவும் விரைவில் ஒருவரை கலீஃபாவாக ஆக்க வேண்டும் என்று மக்கள் தங்களுக்குள் ஆலோசனை செய்து முடிவெடுத்தனர். இறுதியில் மக்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் சென்றனர். தாங்கள் எங்களிடம் பைஅத் வாங்குங்கள் என்று அன்னாரிடம் கூறினர். என்னிடம் பைஅத் செய்ய வேண்டும் என்றால் எனக்கு நீங்கள் எப்போதும் கட்டுப்பட்டு நடக்க நேரிடும். உங்களுக்கு இந்த விஷயம் சம்மதம் என்றால் பிறகு நான் உங்களிடம் பைஅத் வாங்குவதற்கு தயாராக உள்ளேன். இல்லையென்றால், வேறு ஒருவரை உங்களது கலீஃபாவாக நீங்கள் நியமனம் செய்து கொள்ளுங்கள். நான் அவருக்கு எப்போதும் கட்டுப்பட்டு நடப்பேன். யார் கலீஃபாவாக இருந்தாலும் உங்களை விட அதிகமாக நான் அவருக்கு கட்டுப்பட்டு நடப்பேன் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அதற்கு நாங்கள் உங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதற்கு ஆயத்தமாக உள்ளோம் என்று மக்கள் கூறினர். மீண்டும் சிந்தித்துக் கொள்ளுங்கள். உங்களுக்குள் ஆலோசனை செய்து கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள். எனவே ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விட்டால் பின்னர் அனைத்து மக்களும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் பைஅத் செய்து விடுவார்கள். இல்லையென்றால் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் பைஅத் செய்ய மாட்டார்கள். அதுவரை முழுமையாக அமைதியும் நிலைபெற முடியாது என்று மக்கள் தீர்மானித்தனர்.

எனவே ஹகீம் பின் ஹபல் ஹகு என்பவர் சில நபர்களுடன் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களிடமும், மாலிக் அஷ்தர் என்பவர் சில நபர்களை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களை நோக்கியும் சென்றார்கள். அவர்கள் வாளை அடையாளமிட்டு பைஅத் செய்யும்படி கூறினர். அதாவது வாளை ஏந்திக் கொண்டு அவர்களுக்கு முன்னால் நின்றனர். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் பைஅத் செய்ய வேண்டுமென்றால் செய்து கொள்ளுங்கள். இல்லையென்றால் நாங்கள் இப்போதே உங்களை கொன்று விடுவோம் என்று கூறினர். எனவே அவர்கள் நிர்பந்தத்திற்குள்ளாகி சம்மதம் தெரிவித்தனர். மேலும் இவர்கள் திரும்பி வந்தனர். இரண்டாவது நாள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மேடை மீது ஏறி நின்றார்கள். மேலும் மக்களே! நேற்று நீங்கள் எனக்கு தூதுச் செய்தி கொடுத்தீர்கள். நீங்கள் சிந்தித்துக் கொள்ளுங்கள் என்று நான் உங்களிடம் கூறியிருந்தேன். நீங்கள் சிந்தித்து விட்டீர்களா? எனது நேற்றைய கூற்றில் நீங்கள் நிலைபெற்றுள்ளீர்களா? நீங்கள் நிலைபெற்றுள்ளீர்கள் என்றால் நீங்கள் எனக்கு முழுமையாக கட்டுப்பட்டு நடக்க நேரிடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அப்போது அவர்கள் மீண்டும் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களிடம் சென்றார்கள். மேலும் அவர்களை பலவந்தமாக இழுத்துக் கொண்டு வந்தார்கள்.

அறிவிப்பில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. அவர்கள் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களிடம் சென்றார்கள். மேலும் அன்னார் பைஅத் செய்யுமாறு கூறினார்கள். அப்போது அன்னார் இவ்வாறு பதிலளித்தார்கள்:

إِنِّي إِنَّمَا أُبَايِعُ كَرْهًا அதாவது பாருங்கள்! நான் நிர்பந்தத்திற்குள்ளாகி பைஅத் செய்கின்றேன். மகிழ்ச்சியுடன் பைஅத் செய்யவில்லை. அதேபோன்று இந்த மக்கள் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களிடம் சென்றனர். அவர்களிடமும் பைஅத் செய்யுமாறு கூறினர்.

அப்போது அன்னாரும் إِنِّي إِنَّمَا أُبَايِعُ كَرْهًا என்று அதே பதிலையே கூறினார்கள். அதாவது நீங்கள் என்னை பலவந்தப்படுத்தி பைஅத் செய்ய வைக்கின்றீர்கள். நான் உள்ளத்தால் பைஅத் செய்யவில்லை என்று கூறினார்கள்.

இவ்வாறு அப்துர் ரஹ்மான் பின் ஜுன்துப் தனது தந்தையிடமிருந்து இவ்வாறு அறிவிக்கின்றார்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கொலை செய்யப்பட்ட பிறகு அஷ்தர் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களிடம் சென்றார். மேலும் பைஅத் செய்யும்படி கூறினார். ஆனால் எனக்கு காலக்கெடு கொடுங்கள். மேலும் மக்கள் என்ன முடிவெடுக்கின்றார்கள் என்று நான் பார்க்க விரும்புகின்றேன் என்றும் அன்னார் கூறினார்கள். ஆனால் அவர் அன்னாரை விடவில்லை.

جَاءَ بِهِ يُتَلُّهُ تَلًّا عَنِيفًا அதாவது ஆடுகளை இழுத்துக் கொண்டு வருவது போன்று அன்னாரை பூமியில் மிகவும் கடுமையாக இழுத்துக் கொண்டு வந்தனர்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 18 பக்கம் 300–302)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு சஹாபியான ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு எதிராக நின்றார்கள். அதில் தான் தவறிழைத்து விட்டதாக அன்னார் புரிந்து கொண்ட பிறகு போர் மைதானத்தை விட்டு சென்று விட்டார்கள். இங்கு தான் இந்த கதை ஆரம்பமாகின்றது. ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் எதிர்த்து நின்றார்கள். பைஅத் செய்யவில்லை.

இதனுடைய விவரத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள்: ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் நிச்சயமாக எதிர்த்தார்கள். முதலில் பலவந்தமாக பைஅத் செய்தார்கள். பின்னர் எதிர்த்தும் நின்றார்கள். பொருள் என்னவென்றால், பலவந்தமாக பைஅத் வாங்கப்பட்டது. பின்னர் சந்தர்ப்பம் வந்தபோது கருத்து வேறுபாடும் உருவானது. அதன் தொடர்ச்சியாக போரும் நடைபெற்றது. ஆனால் விஷயம் அவர்களுக்கு புரிந்து விட்ட பிறகு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் சரியான பாதையில் இருப்பதை உணர்ந்து போர் மைதானத்தை விட்டு வெளியேறி விட்டார்கள்.

இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: அன்னார் வீட்டிற்கு திரும்பி கொண்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் படையைச் சார்ந்தவராக கூறப்படும் ஒரு காட்டுமிராண்டி மனிதன் அன்னாரை கொன்று விட்டான். பின்னர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் பரிசு கிடைக்கும் என்ற ஆசையில் வந்து இவ்வாறு கூறினான்: நான் உங்களுக்கு நற்செய்தி வழங்குகின்றேன். தங்களின் எதிரி தல்ஹா எனது கைகளால் கொல்லப்பட்டு விட்டார் என்று கூறினான். அதற்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சார்பாக நரகத்திற்கான நற்செய்தியை நான் உனக்கு வழங்குகின்றேன் என்று கூறினார்கள். தல்ஹாவை ஒரு நரகவாசி கொலை செய்வான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என்று அன்னார் கூறினார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 26 பக்கம் 385)

பின்னர் மற்றோர் இடத்தில் இதே சம்பவத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹாக்கிம் இவ்வாறு அறிவிக்கின்றார்: அதாவது சவ்ர் பின் மஜ்ஸா என்னிடம் இவ்வாறு கூறினார்: ஒட்டகப் போர் நாளன்று நான் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களை கடந்து சென்றேன். அந்த நேரத்தில் அன்னார் மரணத் தருவாயில் இருந்தார்கள். மரணத்திற்கு மிக அருகில் இருந்தார்கள். அந்த நபர் அன்னாரை காயப்படுத்தியபோது அன்னார் மரணத் தருவாயில் இருந்தார்கள். மேலும் நீங்கள் எந்த கூட்டத்தைச் சேர்ந்தவர் ஆவீர்கள்? என்று என்னிடம் கேட்டார்கள். அதற்கு நான் ஹஸ்ரத் அமீருல் மூமினீன்

அலி அவர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவன் ஆவேன் என்று நான் கூறினேன். அப்போது நல்லது. உங்களது கைகளை நீட்டுங்கள். நான் உங்களது கைகளில் பைஅத் செய்து விடுகின்றேன் என்று அன்னார் கூறினார்கள். எனவே அன்னார் எனது கைகளில் பைஅத் செய்தார்கள். பின்னர் உயிர்நீத்து விட்டார்கள். நான் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் நடந்த சம்பவத்தை கூறினேன். அன்னார் அதை கேட்டு விட்டு அல்லாஹு அக்பர். இறைவனின் தூதரின் கூற்று உண்மை என நிரூபணமாகி விட்டது! தல்ஹா அவர்கள் என்னிடம் பைஅத் செய்யாமல் சொர்க்கத்தில் நுழைவதை இறைவனும் விரும்பவில்லை என்று கூறினார்கள்.

(அல் கவ்லுல் ஃபஸ்ல், அன்வாருல் உலூம் தொகுதி 2 பக்கம் 318,319)

முதலில் பலவந்தத்திற்குள்ளாகி பைஅத் செய்திருந்தாலும் நான் கூறியதுபோன்று மரணத்திற்கு முன்பாக முழு மனதுடன் பைஅத் செய்து விட்டார்கள். நன்மை இருந்தது. நற்பாக்கியம் இருந்தது. சொர்க்கத்திற்கு அன்னாரை கொண்டு செல்வதற்கான அல்லாஹ்வின் வாக்குறுதியும் இருந்தது. எனவே அன்னார் கிலாஃபத்தின் பைஅத்திலிருந்து விலகியிருந்து மரணிப்பதை அல்லாஹ்வும் விரும்பவில்லை. எனவே மரணத் தருவாயில் அன்னாருக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அன்னார் கிலாஃபத்திற்கு பைஅத் செய்து விட்டார்கள்.

இந்த சம்பவங்கள் இன்னும் தொடர்கின்றன. இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்தில் எடுத்துரைப்பேன்.

இன்று நான் மீண்டும் அல்ஜீரியாவின் அஹ்மதிகளுக்காகவும், பாகிஸ்தானின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யும்படி அறிவுறுத்த விரும்புகின்றேன். அல்லாஹ் அவர்களை பாதுகாப்பாக வைப்பானாக. அல்ஜீரியாவிலும் நிலைமைகள் மிகக் கடினமாகி வருகின்றன. அங்கு ஓர் அரசாங்க வக்கீல் உள்ளார். அவர் மீண்டும் மீண்டும் நமது அஹ்மதிகளுக்கு எதிராக வழக்கு தொடுத்து வருகின்றார். பாகிஸ்தானிலும் இதேபோன்று அஹ்மதிகள் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். அல்லாஹ் கஷ்டங்களை உருவாக்கி வரும் இந்த அனைத்து மக்களையும் அல்லது ஏதாவதொரு வகையில் எதிர்ப்பவர்களையும் படிப்பினைக்குரிய அறிவுரையின் அடையாளமாக்குவானாக. மேலும் விரைவாக இந்த அஹ்மதிகளின் நிலைமைகளை சரி செய்வானாக. எவர் எங்கு கடினத்தை கடந்து வருகின்றாரோ அல்லாஹ் அவருக்கு எளிமையையும், வசதி வாய்ப்பையும் உருவாக்குவானாக.

ஆனால் அத்துடன் பாகிஸ்தானிய அஹ்மதிகளிடம் நான் குறிப்பாக கூறுவேன். நீங்கள் துஆக்களின் பக்கம் எந்த அளவிற்கு கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளதோ அந்த அளவிற்கு இன்னும் உங்களிடம் உணர்வு ஏற்படவில்லை. எனவே முன்பை விட அதிகமாக துஆக்களின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் நம்மை விரைவாக இந்த கஷ்டங்களிலிருந்து வெளியேற்றுவானாக. மேலும் எளிமையை ஏற்படுத்துவானாக. மேலும் நாம் இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை சுதந்திரத்துடன் பாகிஸ்தானிலும் உலகின் எல்லா மூலைகளிலும் எட்ட வைப்பவர்களாக திகழ்வோமாக.

தொழுகைக்குப் பிறகு நான் சில ஜனாஸா காயிப் தொழுகைகளை தொழ வைப்பேன். முதலாவது ஜனாஸா ரப்வாவைச் சேர்ந்த டாக்டர் தாஹிர் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் நவாப் ஷா மாவட்டத்தின் முன்னாள் அமீர் மர்ஹூம் சவுத்ரி அப்துர் ரஸ்ஸாக் சாஹிப் ஷஹீத் அவர்களின் மகனாவார்கள். டிசம்பர் மாதம் 4ஆம் தேதி 60 வது வயதில் மாரடைப்பின் காரணமாக மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

மர்ஹூம் அரசாங்க மருத்துவராக இருந்தார்கள். 1995 ஆம் வருடம் அன்னாருக்கு முதல் முறை மாரடைப்பு ஏற்பட்டிருந்தது. மோசமான உடல் நிலை இருந்தபோதிலும் மிட்டி என்ற இடத்திற்கு தனது பணிமாற்றத்தை பெற்று சென்றார்கள். வக்ஃபே ஜதீத் துறையின் கீழ் நடைபெறும் அல் மஹ்தி மருத்துவமனையில் தொண்டாற்றுவதற்காக பணிமாற்றம் பெற்று சென்றார்கள். அன்னார் கண் சிறப்பு மருத்துவராக இருந்தார்கள். தினமும் மாலையிலும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை அன்றும் அல் மஹ்தி மருத்துவமனையில் கண் நோயாளிகளுக்கு சிகிச்சை செய்து வந்தார்கள். அன்னார் விடுமுறை நாட்களிலும் மஹ்தி மருத்துவமனைக்கு வந்து சென்றார்கள். தொடர்ச்சியாக மருத்துவ முகாம்களில் பங்கு பெற்று வந்தார்கள். சில நேரங்களில் நாள் முழுவதும் அறுவை சிகிச்சைகளில் மும்முரமாக இருந்து வந்தார்கள்.

ஜமாஅத் உறுப்பினர்கள் மட்டுமல்லாமல் துர்பார்க்கர் என்ற ஊரின் ஜமாஅத் அல்லாத மக்களும் அன்னாரை மிகவும் நேசித்தனர். அனைவரின் அன்பிற்குரியவராகவும் இருந்தார்கள். இதயத்தில் பைபாஸ் சர்ஜரி நடைபெற்றிருந்தது. கடைசி ஆண்டுகளில் இரண்டு, மூன்று முறை மிகவும் துன்பத்திற்கு உள்ளாகி இருந்தார்கள். ஆயினும் துர்பார்க்கர் பகுதியில் தனது பணிகளை தொடர்ந்து செய்து வந்தார்கள். மிட்டி என்ற இடத்தில் அன்னார் சுமார் 15 ஆண்டுகளை மனித இனத்திற்கு தொண்டாற்றுவதில் கழித்துள்ளார்கள்.

ஏழைகளை மிகவும் பராமரிப்பவராகவும், விருந்து உபசரிப்பு செய்பவராகவும் இருந்தார்கள். கிலாஃபத் மற்றும் ஜமாஅத் அமைப்பை மிக அதிகமாக கண்ணியப்படுத்தி வந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் இளமைப் பருவத்திலேயே வஸிய்யத் அமைப்பில் இணைந்து விட்டார்கள். அனைத்து பொருளாதார திட்டங்களிலும் இடம் பெற்று வந்தார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் கருணை மற்றும் பாவ மன்னிப்புடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. மேலும் அன்னாரது பிள்ளைகளுக்கும் அன்னாரது நன்மைகளின்படி நடக்கவும் அதனை நிலைநாட்டுவதற்கும் நற்பாக்கியம் வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸா சவுத்ரி அல்லாஹ் தத் சாஹிப் அவர்களின் மகனாகிய ஹபீபுல்லாஹ் மஸ்ஹர் சாஹிப் அவர்களுடையதாகும். ஹபீபுல்லாஹ் மஸ்ஹர் சாஹிப் இறை வழிக் கைதியாகவும் இருந்துள்ளர்கள். அக்டோபர் மாதம் 24ஆம் தேதி 75 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா...

அன்னாரின் தந்தையார் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கரங்களில் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்துள்ளார்கள். சவுத்ரி ஹபீபுல்லாஹ் மஸ்ஹர் சாஹிப் அரசாங்க துறைகளில் பல்வேறு உயர் பதவிகளில் பணியாற்றி வந்தார்கள். அரசாங்கத்தின் ஒரு துறையில் டைரக்டராக இருந்து ஓய்வு பெற்றார்கள். 50 ஆண்டுகளையும் விட கூடுதலாக அன்னார் ஜமாஅத்திற்கு தொண்டாற்றியுள்ளார்கள். மஜ்லிஸின் காயித் என்ற நிலையிலிருந்து ஸயீம் அன்ஸாருல்லாஹ் ஆகவும் பல்வேறு ஜமாஅத் பொறுப்புகளிலும் அன்னார் இருந்துள்ளார்கள். ஜமாஅத் தலைவராக தொண்டாற்றும் பாக்கியமும் பெற்றுள்ளார்கள்.

தவ்ஹீனே ரிஸாலத் என்ற சட்டத்தின்கீழ் முதன் முதலில் ஓர் அஹ்மதிக்கு மரண தண்டனைக்கான வழக்கு தொடுக்கப்பட்டதென்றால் அது மதிப்பிற்குரிய சவுத்ரி ஹபீபுல்லாஹ் மஸ்ஹர் சாஹிப் அவர்கள் மீதுதான். 1991 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29 ஆம் தேதி அநேகமாக ரப்வாவில் அந்த வழக்கு பதியப்பட்டது. இவ்வாறு வரலாற்று ரீதியில் இந்த சட்டத்தின்கீழ் இறைவழி கைதியாக திகழ்ந்து துன்பங்களை சகித்துக் கொள்ளும் நற்பாக்கியம் பெற்ற முதல் அஹ்மதி அன்னார் ஆவார்கள்.

### திருக்குர்ஆனிலிருந்து...

(இது) உயிருள்ளவருக்கு எச்சரிக்கை செய்வதற்காகவும் நிராகரிப்பவர்களைக் குறித்து, அல்லாஹ்வின் வாக்கு நிறைவேற்றப்படுவதற்காகவும் (அவற்றைத் தெளிவாக விளக்குகின்றது). (36:71)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+ 91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 21 January 2021 Issue No. 3

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

செஷன் கோர்ட் அன்னாருக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கியபோதிலும் எதிரிகள் உயர் நீதிமன்றத்தில் முறையிட்டனர். அதனால் உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்த அப்துல் மஜீத் என்பவர் தவ்ஹீனே ரிஸாலத் என்ற வழக்கில் அன்னாரின் ஜாமீனை ரத்து செய்தார். அன்னாருக்கு எதிராக தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கு எதிரிகள் என்ன என்ன முயற்சிகள் செய்ய முடியுமோ அதனை பெரிய அளவில் செய்தனர். ஆங்கிலத்திலும், உருதுவிலும் பிரசுரங்கள் விநியோகித்தனர். மிகவும் தவறான சொற்கள் அன்னாருக்கு எதிராக பயன்படுத்தப்பட்டன. எவ்வாறிருப்பினும் சவுத்ரி ஹபீபுல்லாஹ் சாஹிப் அவர்கள் மிகவும் தீரத்துடனும், துணிச்சலுடனும் அந்த காலத்தில் இறைவனின் திருப்தி மீது திருப்தியடைந்து சிறை தண்டனையின் கஷ்டங்களை சகித்துக் கொண்டார்கள். பின்னர் சில மாதங்களிலேயே அல்லாஹ் அன்னாரின் விடுதலைக்கான ஏற்பாட்டையும் செய்து விட்டான்.

அன்னார் தொடர்ச்சியாக தஹஜ்ஜுத் தொழுது வந்தார்கள். ஐவேளை தொழுகையை பேணக் கூடியவராக இருந்தார்கள். இறுதி மூச்சு வரை தொழுகையை நிலைநாட்டும்படி பிள்ளைகளுக்கு அறிவுரை செய்து வந்தார்கள். அனைவரிடமும் இனிமையாக பழகக் கூடியவர். பணிவானவர். கிலாஃபத்தின் மீது அர்ப்பணிப்பு கொண்டவராகவும் உண்மையான பேரன்பராகவும் திகழ்ந்தார்கள். குத்பாக்களையும், சொற்பொழிவுகளையும் தொடர்ச்சியாக கேட்டு வந்தார்கள். இன்னும் கூறப்போனால் குடும்பத்தினரை ஒன்றுதிரட்டி அனைத்து பணிகளையும் விட்டு விடுங்கள். இங்கு அமர்ந்து குத்பாவின் நேரத்தில் குத்பாவை கேளுங்கள் என்று குடும்பத்தினரிடம் கூறி வந்தார்கள். தான் வீட்டில் இருக்கும்போது தன்னுடன் அனைவரையும் குத்பா கேட்க வைத்தார்கள்.

இறை அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள். 1/9 பங்கு வஸிய்யத் செய்திருந்தார்கள். அன்னார் தனது நினைவாக தனது மனைவி ரகீயா பேகம் சாஹிபா மட்டுமல்லாமல் ஐந்து மகன்களையும் ஒரு மகளையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாரின் ஒரு மகன் ஹஸீப் அஹ்மது சாஹிப் ஜமாஅத்தின் முரப்பியாக இருக்கின்றார். அவர் ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷன் துறையில் ஆங்கில டெஸ்க்கில் பணி செய்து வருகின்றார். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரது நன்மைகளை அன்னாரது பிள்ளைகளுக்கும் தொடரச் செய்யும் நற்பாக்கியத்தை வழங்குவானாக.

அடுத்த ஜனாஸா மதிப்பிற்குரிய பஷீருத்தீன் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். கலீஃபா பஷீருத்தீன் அஹ்மது சாஹிப் நவம்பர் மாதம் 30ஆம் தேதி தனது 86 வது வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیْہِ رَاجِعُوْنَ

இந்தியாவின் ஒரு நகரமான ஃபிரோஸ்பூரில் அன்னார் பிறந்தார்கள். அன்னார் டாக்டர் கலீஃபா தக்யுத்தீன் சாஹிப் அவர்களின் மகனாவார்கள். மேலும் ஹஸ்ரத் டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் சாஹிப் அவர்களின் மகன்வழி பேரன் ஆவார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் முதல் மனைவியான ஹஸ்ரத் உம்மே நாஸிர் சாஹிபாவின் தந்தை ஹஸ்ரத் கலீஃபா ரஷீதுத்தீன் சாஹிப் ஆவார்கள். ஹஸ்ரத் கலீஃபா ரஷீதுத்தீன் சாஹிப் அவர்களின் பொருள் தியாகம் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பாராட்டி பேசியுள்ளார்கள். எவ்வாறிருப்பினும் மர்ஹூம் அன்னாரின் சந்ததியை சார்ந்தவராவார்கள். ஜமாஅத் பணிகளிலும் பங்கு பெற்று வந்தார்கள். அஹ்மதி அல்லாதவர்களை தமது வீட்டிற்கு அழைத்து தப்லீக் செய்து வந்தார்கள். பல்வேறு இடங்களில் வசித்து வந்தார்கள். பின்னர் 1998 ஆம் ஆண்டு சுவீடன் திரும்பிச் சென்று விட்டார்கள். அங்கு 1999 ஆண்டு அன்னாருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. உடல்நலம் பெற்ற பிறகு அன்னார் பள்ளிவாசலின் பணிகளில் மும்முரமானார்கள். தப்லீக் செயலராகவும் இருந்தார்கள். ஒவ்வொரு ஆண்டும் இங்கு யூ.கே ஜல்ஸாவில் தனது மனைவியுடனும் பிள்ளைகளுடனும் வந்தார்கள்.

தனது நினைவாக தனது மனைவி மட்டுமல்லாமல் மூன்று மகள்களையும் இரண்டு மகன்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாரின் மனைவி ஓர் ஆங்கிலேயப் பெண்மணி ஆவார். கிருஸ்துவ மதத்திலிருந்து அஹ்மதி ஆகியிருந்தார். ஆயினும் மிகவும் வெட்கம் நிறைந்த ஆடைகளை அணிகின்றர்கள். பர்தாவை பேணக்கூடியவராகவும் இருக்கின்றார்கள். மிக எளிமையாக வாழ்க்கையை கழிக்கக் கூடியவராகவும் இருக்கின்றார்கள். அன்னாருக்கு மார்க்க கல்வியை பெறுவதற்கும் ஆர்வம் உள்ளது. அதன்படி செயல்படுவதற்கு முழு முயற்சிகளையும் செய்கின்றார்கள். அல்லாஹ் அன்னாரது ஈமானிலும் உறுதிப்பாட்டிலும் முன்னேற்றத்தை வழங்குவானாக. அன்னாரது நன்மைகளின் வழி நடப்பதற்கு அன்னாரின் பிள்ளைகளுக்கும் நற்பாக்கியத்தை வழங்குவானாக. அல்லாஹ் மர்ஹூமுடன் கருணையுடனும், பாவமன்னிப்புடனும் நடந்து கொள்வானாக.

அடுத்த ஜனாஸா மதிப்பிற்குரிய அமீனா அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் கலீஃபா ரஃபீவுத்தீன் சாஹிப் அவர்களின் மனைவி ஆவார்கள். அக்டோபர் மாதம் 19ந் தேதி மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیْہِ رَاجِعُوْنَ

அன்னார் கயானா நாட்டைச் சேர்ந்தவராக இருந்தார்கள். 1940 ஆம் ஆண்டு கயானாவில் மிகவும் பிரபலமான ஒரு முஸ்லிம் வணிக குடும்பத்தில் அன்னார் பிறந்தார்கள். லண்டனில் அன்னார் மாணவியாக இருந்தபோது அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டார்கள். அந்த தருணத்தில் அன்னாரின் திருமணம் ஆர்டி அஹ்மது சாஹிப் மர்ஹூமுடன் நடந்தது. ஆர்டி டாக்டர் கலீஃபா தக்யுத்தீன் சாஹிப் அவர்களின் மகனாக இருந்தார்கள். ஹஸ்ரத் கலீஃபா ரஷீதுத்தீன் சாஹிப் அவர்களின் சந்ததிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள்.

மர்ஹூமா அனுதாபமிக்கவராகவும், மக்களை பராமரிப்பவராகவும், விருந்து உபசரிப்பு செய்யும் பெண்மணியாகவும் இருந்தார்கள். தொழுகைகளை பேணி வந்தார்கள். அன்னாருக்கு எப்போதும் தனது தொழுகைகளைப் பற்றிய கவலை இருந்து வந்தது. உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோதிலும் தஹஜ்ஜுத் தொழுது வந்தார்கள். தொடர்ந்து திருக்குர்ஆன் ஓதி வந்தார்கள். உடல் நிலை சரியில்லாமல் இருந்தபோதிலும், கேன்ஸர் நோய் ஏற்பட்டிருந்தபோதிலும் இங்கிலாந்தில் ஏறக்குறைய எல்லா ஜலஸாவிலும் பங்கு பெற்றுள்ளார்கள்.

துஆக்களின் மீது உறுதியான நம்பிக்கை இருந்தது. கிலாஃபத்துடன் கலப்பற்ற தன்மை மற்றும் நன்றியுணர்வு கொண்ட தொடர்பு இருந்தது. என்னை சந்தித்தபோதெல்லாம் மிக பணிவுடன் சந்தித்து வந்தார்கள். துஆவிற்காக கூறி வந்தார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கும் ஜமாஅத்துடன் உறுதியான தொடர்பை நிலைநாட்டும் நற்பாக்கியத்தை வழங்குவானாக.

(தமிழில்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad